# தமிழரசு

1.3.1995 ரூ.3










உலகத் தமிழ்
மாநாடு:

நாடகக்
காட்சிகளில்
சில...









இதழ்தோறும் ஓர் இனிய குறள்

**விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது (15)**

* வானத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லாமல், உலகத்தில் ஓரறிவுயிராகிய பசும்புல்லின் தலையையும் காண முடியாது.


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு: 2026

மாசித் திங்கள்: 17

மலர்: 25 இதழ்: 17

1.3.1995 விலை: ரூ. 3


# இந்த இதழில்...


✦ வடசென்னை அனல் மின்நிலையத் தொடக்க விழா: மாண்புமிகு முதல்வர் உரை . . . . . . 2

✦ தமிழால் முடியும்! —திரு. ஆர். வெங்கட்ராமன் . . . . . . 9

✦ வெற்றி மாநாடு! —மாண்புமிகு எஸ். தொண்டமான் . . . . . . . . . 13

✦ பல்கலைக் கழகங்களில் பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் அறக்கட்டளைகள் . . . . . . . . . 14

✦ அந்த நாள் இந்த நாள் —மாண்புமிகு டாக்டர் நாவலர் . . . 15

✦ தமிழ் வரலாற்றின் தொடர்ச்சி —மாண்புமிகு இராம. வீரப்பன் . . . . 17

✦ நூல் நயம். . . . . . . . . . . . . . . 23

✦ படமும் செய்தியும் . . . . . . . . . . . 24

✦ தமிழுக்குப் பொற்காலம் —மாண்புமிகு மு. தென்னவன் . . . 27

✦ மாணவர் பக்கம் . . . . . . . . . . . . 31

✦ இணையில்லா முதல்வர் இன்றுபோல் வாழ்க! —கவியரசர் இளந்தேவன் . . . . . . 32

✦ அறிவியல் தமிழ் வளர்ப்போம்! —திரு. ஏ.கே.ஏ. அப்துல்சமது . . . . 34

✦ எல்லாம் நீ! —புலவர் புலமைப்பித்தன் . . . . . . 38

✦ சான்றோர் கடமை! —மாண்புமிகு டி.எம். செல்வகணபதி. . . . . . . . 44

✦ பைந்தமிழின் சில பாகுபாடுகள் . . . . . . . . . . . . . 46


எதிர்வரும் தலைமுறையினர் நல்வாழ்க்கையே குறிக்கோள், என்ற இலட்சிய தொலைநோக்குப் பார்வையுடன், செயல்பட்டு வருகிறது உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த, இந்த அரசு, உங்கள் அரசு.

ஒரு புறம், பெருகி வரும் மின் தேவைகள்- மற்றொரு புறம், குறுகி வருகின்ற நிதி ஆதாரங்கள் இருப்பினும், கடந்த காலங்களில், மின் துறைக்கு 100 கோடி ரூபாய்க்கும் குறைவாக, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்த சூழ்நிலையை மாற்றி 1994 –95 ஆம் நிதி ஆண்டிற்கு மட்டும், 805 கோடி ரூபாய், நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு, நாங்கள் அளித்து வருகின்ற முக்கியத்துவத்தை, இந்தக் கூடுதல் நிதி ஒதுக்கீடு, உணர்த்தும் என்று கருதுகிறேன்.

**1989 - 90** ஆம் ஆண்டு, வளர்ச்சிப் பணிகளுக்கென்று, தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, 1360 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில், வளர்ச்சிப் பணிகளுக்கு, ஒரு புதிய உத்வேகம் அளிக்கப்பட்டதால், இந்த ஒதுக்கீடு, படிப்படியாக அதிகரித்து, 1995-96 ஆம் நிதி ஆண்டிற்கு 3,200 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. 1360 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு, இன்று 3,200 கோடி ரூபாயாக, அதாவது இரண்டரை மடங்கு உயர்ந்துள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். காழ்ப்புணர்ச்சியுடன் இன்று, எங்களை எப்படியாவது குறை கூற வேண்டும், என்று செயல்படுபவர்களுக்கு, இந்தச் சாதனை மட்டும் கண்ணுக்குத் தெரியாமல் போவது ஏன் என்பது தான், எங்களுக்கு விளங்கவில்லை.

தொலைநோக்குப் பார்வையுடன் எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்க்கை ஒன்றையே, குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருவதால் தான், இயற்கை அன்னையும், நமக்கு இன்று துணை நிற்கிறாள்! இயற்கையின் அருளால், தமிழகத்திலுள்ள பெரும்பாலான ஏரிகள், குளங்கள், நீர்நிலைகள், முன்பு என்றைக்குமே இல்லாத அளவிற்கு, கடந்த மூன்று ஆண்டுகளாக நிரம்பி வழிகின்றன. கிராமப்புறங்களில், வேளாண் தொழில் பெருகி வருவதோடு, புதிய சாதனைகளையும் படைத்து வருகிறோம்.

குறிப்பாக, நெல் உற்பத்தித் திறனில், பின்




தங்கியிருந்த நமது மாநிலம், இன்று அகில இந்திய அளவில், பஞ்சாப் மாநிலத்தை அடுத்த, இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது, என்பதைக் குறிப்பிடுவதில், நான் பெருமிதம் அடைகிறேன்.

நீர் வளம் பெருகி இருப்பதால், இன்று தமிழகத்திலுள்ள புனல் மின் நிலையங்கள், தங்களது முழுத் திறன் அளவுக்கு, இயங்கி வருகின்றன. அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைப் பெற்றுத் தந்ததோடு மட்டும் இன்றி, நிலக்கரியின் போக்குவரத்துச் செலவைக் குறைத்து, தமிழகத்தை 'மின் வெட்டு இல்லாத ஒரு மாநிலமாக', உருவாக்கி இருக்கிறோம் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, மின் உற்பத்தி அதிகரித்துள்ளது. 1991 இல், ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யப்பட்ட, மின்சாரத்தின் சராசரி அளவு, 5.8 கோடி யூனிட் ஆகும். ஆனால், இன்று, ஒரு நாளைக்கு 8.2 கோடி யூனிட் மின்சாரம், உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகிக்கப்படுகிறது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மின் உற்பத்தியைப் பெருக்க, பெரிய அளவிலான முதலீடுகள் தேவை என்பதால் தனியார் துறையையும், முதன் முதலாக இந்தத் துறையில் ஈடுபடுத்தியது, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள, இந்த ஆட்சி தான், உங்கள் ஆட்சி தான் என்பதையும், சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வெளிநாட்டுத் தொழில் நிறுவனத்தின் துணையோடு, 7500 கோடி ரூபாய் மதிப்பில், 1500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம் 376 கோடி ரூபாய் மதிப்பில், 120 மெகாவாட் திறனுள்ள, பேசின் பிரிட்ஜ் எரிவாயு மின் சுழலி, மின் உற்பத்தித் திட்டம் உலக அளவிலேயே முதன் முதலாக, சிதம்பரனார் மாவட்டம், குலசேகரப்பட்டினம் கடற்கரைப் பகுதியில், Sea Solar Power Incorporated என்ற அமெரிக்க நிறுவனத்தால், 800 கோடி ரூபாய் செலவில், கடல் நீர் வெப்பத்திலிருந்து, 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், தேவர்குளத்தில், 55 கோடி ரூபாய் மதிப்பில், காற்றாலைகளில் இருந்து, 15 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஆகியவை, தமிழக மின் துறைக்கு, ஒரு புதிய பரிமாணத்தை, உண்டாக்கித் தரும் என்பதில் ஐயமில்லை.

5020 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு, மேலும் 8 புதிய மின் திட்டங்களையும், உங்கள் அரசு, செயல்படுத்தி வருகிறது என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முறை சாரா எரிசக்தியைப் பயன்படுத்தி, மின் உற்பத்தியைப் பெருக்குவதிலும், தமிழக அரசு, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக



# வட சென்னை அனல் மின் நிலையம் துவக்க விழா

**சென்னை** எண்ணூரில் 1,192 கோடி ரூபாய் செலவில் அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டு உள்ளது. இதன் தொடக்க விழா தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் 15.2.95 அன்று எண்ணூரில் மிகக் கோலாகலமாக நடந்தேறியது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு புதிய அனல் மின் நிலையத்தைத் திறந்து வைத்து நாட்டிற்கு அர்ப்பணித்தார். 176 கோடி ரூபாய் மதிப்பில் 13 புதிய துணை மின் நிலையங்களுக்கும் அடிக்கல் நாட்டினார். இதற்கு அடையாளமாக மேடையில் இருந்தவாறே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொத்தானை அழுத்த, மேடையின் அருகே இருந்த திரை விலகி அதிலிருந்த உலக உருண்டை இரண்டாகப் பிளந்து, அதிலிருந்து புதிய அனல் மின் நிலையத்தின் மாதிரித் தோற்றம் வெளிப்பட்டது. தொடர்ந்து புதிய துணை மின் நிலையங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை யேற்று உரை நிகழ்த்தினார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் வரவேற்றுப் பேசினார். தமிழ்நாடு மின்சார வாரியத்தலைவர் திரு ஏ.ப. முத்துசாமி, இ.ஆ.ப, அவர்கள் திட்ட அறிக்கை படித்தார். மின்துறைச் செயலர் திரு எம். தங்கதுரை, இ.ஆ.ப, அவர்கள் நன்றி நவின்றார்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், அரசு அதிகாரிகள் முக்கியப் பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அனல் மின் நிலையத் தொடக்க விழாவிற்கு மிகப் பிரம்மாண்டமான பந்தல் அழகிய முறையில் அமைக்கப்பட்டிருந்தது. மேடையும் வண்ண மயமாகக் காட்சி அளித்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் அர்ப்பணிக்கப்பட்ட இந்தப் புதிய அனல் மின் நிலையம், பல புதிய தொழிற்சாலைகளின் தேவையை நிறைவு செய்யும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை!

- நிகழ்ச்சித் தொகுப்பு:
கருணா. சண்முகசுந்தரம்

இருந்து வருகின்றது. குறிப்பாக, காற்றாலைகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதில், இன்று அகில இந்திய அளவில், முதலிடத்தைப் பெற்று, மற்ற மாநிலங்களுக்கு, முன்னோடியாக விளங்குகின்றது நமது மாநிலம் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமின்றி, சூரிய வெப்ப ஒளி Solar Energyயையும் பயன்படுத்தி, பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றோம்.

நாங்கள் தற்போது மேற்கொண்டு வரும், அனைத்துப் புதிய மின் உற்பத்தித் திட்டங்களும், முழுத் திறனில் செயலாற்றத் துவங்கும்போது, நிச்சயமாகத் தமிழகம் மின் உற்பத்தியில், ஒரு உபரி மாநிலமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

1192 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட, இந்த வட சென்னை அனல் மின் நிலையத்தின் முதல் பகுதி, 210 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும். வெகுவிரைவில், இதே திறன் கொண்ட, இரண்டு நிலையங்கள், செயல்படத் துவங்கும். இரண்டாவது கட்ட விரிவாக்கத்தில், 500 மெகாவாட் மின்சாரமும் மூன்றாவது கட்டத்தில், 1000 மெகாவாட் மின்சாரமும் தயாரிப்பதற்கு, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மொத்தம், 2130 மெகாவாட் மின்சாரம், உற்பத்தி செய்கின்ற ஒரு பெரிய மின் நிலையமாக, இது உருவாகும்போது, சென்னை நகரின் வளர்ந்து வருகின்ற மின்சாரத் தேவைகளை நிச்சயமாகப் பூர்த்தி

செய்ய இயலும். மணலி, கும்மிடிப்பூண்டிப் பகுதியில், அமைந்துள்ள தொழிற்சாலைகள் தோன்றுவதற்கும், இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதற்கும், வழி வகுக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்தப் புதிய அனல் மின் நிலையத்திற்கு, தடையின்றி, நிலக்கரியைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கும் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும் இதன் அருகில் சிறிய துறைமுகம், Satellite Port ஒன்று 550 கோடி ரூபாய் செலவில், வெகு விரைவில் ஏற்படுத்தப்படும் என்பதையும் அதற்கான ஆயத்தப் பணிகளை, சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம், மேற்கொண்டுள்ளது என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இப்பகுதியில், இந்த மின் நிலையம் உருவாவதை ஒட்டி, 50 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு புதிய தீயணைப்பு நிலையத்தை அமைப்பதற்கு, இன்று நான் ஆணை வழங்கி உள்ளேன் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தீயணைப்பு நிலையம், இப்பகுதி வாழ் மக்களுக்கும் பயன்படும் என்பதை எண்ணி, மகிழ்ச்சி அடைகிறேன்.

சுற்றுப்புறச் சுழல் பாதுகாப்பில், தமிழக அரசு கொண்டுள்ள, ஆத்மார்ந்த ஈடுபாட்டின் காரணமாக, பழைய அனுபவங்களின் அடிப்படையில், இப்பகுதியின் சுற்றுப்புறச் சூழலை, மாசு படாமல் பாதுகாக்க, நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று கேட்டுக்கொண்டேன். அதன் விளைவாக, 275 மீட்டர் உயரமுள்ள புகை போக்கியும், நவீன மாசுக் கட்டுப்பாட்டுச் சாதனங்களையும் அமைத்து, இப்பகுதியின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எடுத்த நடவடிக்கைகளுக்கு, எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மின் நிலையத்தை அமைக்கும் பணியில், உள்ளார்ந்த கடமை உணர்வோடு ஈடுபட்ட, அத்தனை அலுவலர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், அருமைச் சகோதரர் கண்ணப்பன் அவர்கள் , மிகவும் திறமைசாலி . சலியாமல் உழைக்கக் கூடிய, கடுமையான உழைப்பாளி. தனக்குக் கொடுக்கப்பட்ட துறையின், முக்கியத்துவத்தை உணர்ந்து, இரவு பகல் என்று பாராமல், கடுமையாக உழைத்து, மின் உற்பத்திப் பெருக்கத்தில், அதிக ஈடுபாட்டைக் காட்டி இன்று மின் வளர்ச்சியில், தன்னிறைவைப் பெறுவதற்கு, வழி வகுத்து வருகிறார் என்றால், அது மிகையாகாது. எந்தவொரு பணியைச் செய்ய வேண்டுமென்றாலும், அதை நேர்த்தியாகவும், விரைவாகவும் செய்து முடிக்கக் கூடிய, ஆற்றலைப் படைத்தவர், அருமைச் சகோதரர் திரு கண்ணப்பன் அவர்கள். எனது எண்ணத்தைப் புரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு பணிகளைத் திறம்பட ஆற்றுவதில், வல்லவர் அவர். இன்னும் சொல்லப் போனால், எனது

## பள்ளு

தமிழ்நாட்டின் 16-ஆம் நூற்றாண்டிலிருந்து 19-ஆம் நூற்றாண்டு வரை மக்கள் மத்தியில் மிகச் சிறப்புற்றிருந்த ஒரு வகைக் கூத்துக் கலை இலக்கியமாகப்பள்ளுவிளங்குகிறது. 96 வகை பிரபந்தங்களில் ஒன்றாகப் பள்ளு குறிப்பிடப்படுகிறது.

## குறவஞ்சி

தமிழ் இலக்கிய வகையில் தனித்தன்மை வாய்ந்ததாகத் திகழ்வது குறவஞ்சி நாடக வகையாகும். ஏறத்தாழ முந்நூறு ஆண்டுக் கால வளர்ச்சியை உடைய குறவஞ்சி இயல் இசை நாடகம் என்னும் மூன்று நிலைகளிலும் சிறப்புப் பெற்றது.

எதிர்பார்ப்புகளுக்கு ஒரு படி மேலாக, எடுத்த பணியைச் செய்து முடிக்கின்ற மன உறுதியும், திறமையும் படைத்தவர், சகோதரர் கண்ணப்பன் அவர்கள் . இன்று என்னால் தமிழக மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட, வட சென்னை அனல் மின் நிலையத்தின் முதல் பகுதி, அவரது திறமைக்கும், ஆற்றலுக்கும், தலைமையின் எண்ணத்தைப் புரிந்து பணியாற்றும் செயல்திறனுக்கும், ஒரு எடுத்துக்காட்டாகும். இந்த அனல் மின் நிலையத் திட்டத்தை, எனது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, அனைவரும் வியக்கும் வண்ணம், விரைந்து செயல்படுத்திக் காட்டிய ஆற்றல் ஒரு புறம், இந்தத் துவக்க விழாவை ஒரு மாபெரும் மாநாடு போல, எழுச்சியுடன் ஏற்பாடு செய்து, அனைவரின் பாராட்டைப் பெறும் நிர்வாகத் திறமை, மற்றொரு புறம் என்று, பன்முக ஆற்றலை ஒருங்கே பெற்றவர் அவர்.

எப்போதும் இன்முகத்துடன், சுறுசுறுப்பாகச் செயல்படும் சகோதரர் கண்ணப்பன் அவர்கள், ஒரு போதும் ஓய்வெடுத்து நான் பார்த்ததில்லை. தலைமை மீது அசைக்க முடியாத விசுவாசமும், ஏற்றுக் கொண்ட பணிகளை, நேர்த்தியாகச் செய்து முடிக்கும் செயலாற்றலும் படைத்த, அருமைச் சகோதரர் கண்ணப்பன் அவர்கள் , இன்றைய வளர்ந்து வரும் தலைமுறைக்கு, நல்லதொரு எடுத்துக்காட்டு.

தமிழ்நாடு மின் வாரியத்தின், நிதிப் பற்றாக்குறைகளைச் சமாளித்து, புதிய திட்டங்களைச் செயல்படுத்தி கண்ணும் கருத்துமாக, இத்துறையின் வளர்ச்சிக்காக, அயராது பாடுபட்டு வரும், அருமைச் சகோதரர் திரு கண்ணப்பன் அவர்களுக்கு, எனது மனமார்ந்த பாராட்டுதல்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தரமணியில் அமைக்கப்பட்டுள்ள, 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட, துணை மின் நிலையத்தை, இன்று துவக்கி வைத்ததிலும் புதிய துணை மின் நிலையங்களை நிறுவுவதற்கு, அடிக்கல் நாட்டியதிலும், மகிழ்ச்சி அடைகின்றேன். மயிலாப்பூர், வள்ளுவர் கோட்டம், மணலி, ஏழு கிணறு, ஜெ.ஜெ.நகர், உயர்நீதிமன்றம், ராபின்சன் பார்க், ஜோகிர் தோட்டம், மேற்கு மாம்பலம், பெசன்ட் நகர், அழிஞ்சிவாக்கம், மெதூர், மாதரப்பாக்கம் ஆகிய இடங்களில், இந்தத் துணை மின் நிலையங்கள் உருவாகும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரின் மின் விநியோகத்தைச் சீரமைக்கவும், தட்டுப்பாடற்ற மின் விநியோகத்தை வழங்கவும், SCADA ஸ்கடா என்ற,மையக்கட்டுப்பாட்டுச்சாதனம் ஒன்றை அமைப்பதற்கு, அடிக்கல் நாட்டியதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு, என்னைக் காண்பதற்காகவும், எனது பேச்சைக் கேட்பதற்காகவும், பெருமளவில் கூடியுள்ள நீங்கள் அனைவரும், எல்லா வளமும் எல்லா நலமும் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற, எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

## சிந்து

தமிழ்ப்பாவின் வகைகளில் ஒன்றான சிந்துவின் பெயராலே எழுந்த நூல்களே சிந்து நூல்களாகும்.

இசைப்பாடல் வகையைச் சார்ந்த சிந்து நாட்டுப்புறப் பாடல்களின் வடிவங்களில் ஒன்று என்றே கூறலாம்.

நமக்குக் கிடைத்திருக்கும் சிந்து நூல்களில் மிகப் பழமையானது அண்ணாமலை ரெட்டியார் பாடிய காவடிச் சிந்து தான்.

-தமிழ் இலக்கியக் கொள்கை -
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# தமிழால் முடியும்!

முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர்

## திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள்



சீரும் சிறப்புமான எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் 'தமிழ் மொழியின் உயர்வு' என்ற வாழ்த்தரங்கினைத் துவக்கி வைக்கும் பேற்றினை எனக்கு அளித்ததற்கு நான் பெருமைப்படுகிறேன். உலகத் தமிழ் மாநாடு இந்தியாவில் கூடுவது மூன்றாவது முறை. முதலில் சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் திரு அண்ணாதுரை அவர்கள். அடுத்து, மதுரையில் மாண்புமிகு முதலமைச்சர் எனது நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் உலகத் தமிழ் மாநாடுகளை அன்றைக்குச் சிறப்பாக நடத்தினார்கள்.

இன்று தஞ்சையில் கூடும் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, சரித்திரத்தில் இடம் பெறுகின்றவகையில், முதலமைச்சர் மாண்புமிகு ஜெயலலிதா அவர்கள் அமைத்துள்ளார்கள். "தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்று சொல்லுமளவுக்குத் தமிழ் மக்கள் அனைவரும் விழாக் கோலம் பூண்டு, ஆனந்த நடனம் ஆடுகின்றார்கள். 'நெற்களஞ்சியம்' என்று போற்றப்படும் தஞ்சை, இன்று 'சொற்களஞ்சிய'மாகத் திகழ்கின்றது. தஞ்சாவூரில் பிறந்த என் உள்ளம் சொல்லொணாப் பெருமிதம் அடைகிறது.

தமிழ்மொழி உலகிலேயே தொன்மையான மொழி; அதன் காலத்தைக் கண்டறிந்தவர் எவரும் இலர்; 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்னரே தோன்றிய மூத்த மொழி' என்று அது பாராட்டப்படுகிறது. மேலும், பாரதியார் அவர்கள் சொன்னார்கள் "தமிழ்மொழி, ஆதி சிவனால் அறியப்பட்டு, அகத்தியரால் வளர்க்கப்பட்ட மொழி!. ஒரு மொழியைக் கொண்டு, ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்தை நாம் அளந்து விடலாம். கருத்துக்களில் இருப்பது சொல். கருத்து இல்லாமல் சொல் இருக்க முடியாது. ஆகவே, பண்டைய கருத்துக்களை வைத்துக்கொண்டு, அந்நாட்டின் நாகரிக வளர்ச்சியைக் கணிக்க முடியும்.

சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். அரண், கோன் அக்காலத்து அரசியல் அமைப்பையும், வில், வேல், வாள், கணை என்பவை போர்முனைகளைப் பற்றியும், சிற்றூர், பேரூர், பெருநகர் என்பவை அங்கு நிலவியிருந்த கிராம நிர்வாக அமைப்புக்களையும், அவற்றின் நிர்வாகத்தைப் பற்றியும், உழவு, நூற்றல், நெய்தல் என்பவை தொழில் முறைகளைப் பற்றியும், கட்டுமரம், கலம், நாவாய் என்பவை அக்காலத்தில், கடலைக் கடப்பதற்காக என்ன சாதனங்கள் உபயோகப்படுத்தப்பட்டு வந்தன என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன. இதன்மூலம் எவ்வளவு ஒரு சிறந்த நாகரிகம், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் நிலவியிருந்தது என்பது

தெரியவருகிறது. உதாரணமாக, திருக்குறளை எடுத்துக்கொள் வோம். எக்காலத்திற்கும், எந் நாட்டிற்கும் பொருந்தும் வாழ்க்கை நிலையை அது வகுக்கின்றது. திருக்குறளில் சொல்திட்பம், பொருள் செறிவு ஆகியவற்றைக் கண்டு வியவாதார் உலகில் இல்லை. அதனை ஒத்த ஒரு மறுநூல் உலகத்தில் இல்லை என்றே நாம் சொல்லமுடியும். பொறுப்பாய் அரசு எவ்வாறு செயல்பட வேண்டும்; இடுக் கண்களை எவ்வாறு களைய வேண்டும் என்ற ஆழ்ந்த கருத் துக்களை வள்ளுவர் தெரிவித் துள்ளார். அந்தவகையில்தான் அடிப்படை, ஆட்சியின் தவறு களை எடுத்துக் காட்டுதல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் இதனை வலி யுறுத்தி,

"இடிப்பாரை இல்லாத ஏமரா
மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"

என்று கூறினார். இடித்து அறிவுரைப்பாரைப் பெறாத மன்னன் - மன்னன் என்றால் அக்காலத்தில் ஆட்சி செய்பவன்; இக்காலத்தில் மன்னன் என்று சொன்னால், யார் பொறுப்பில் இருக்கிறார்களோ அவர்களுக்குப் பொருந்தும் - அவனைக் கெடுப்பவர், அதாவது பகை வர்கள் யாரும் இல்லை யென்றாலும் தானாகவே கெட்டு விடுவான்; அழிந்துவிடுவான் என்பது பொருள்.

மேல்நாடுகளில் ஜனநாயகம் என்ற சொல் எழுவதற்கு முன்பே, தமிழ்நாட்டில் நாம் அதற்கு ஒரு இலக்கணமே வகுத்

---

## வீட்டு நூலகம்

**எந்த வீட்டில் புத்தகசாலை இருக்கிறதோ,**
**அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது.**

**–பிளேட்டோ**

---

திருக்கிறோம் என்பதைப் பார்த்து நாமெல்லோரும் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்"

என்று பாரதியார் பாடினார். தமிழ்க் காவியங்களே இதற்குச் சான்று. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்ப் பண்புகளும் அவற்றில் அடங்கியுள்ளன.

சிலப்பதிகாரம், நமக்கு அந் நாளின் இசை வடிவ விவரங் களைத் தருகிறது. அகநானூறு, புறநானூறு போன்ற சங்க இலக்கியங்கள் அன்பு, வாழ்க்கை, அமைதி, வீரம் போன்ற அடிப்படை மனித உணர்ச்சிகளை நன்கு உணர்த்துகின்றன. சோழர் கால இலக்கியங்கள், குறிப்பாகக் கம்பராமாயணம் போன்றவை, வால்மீகி சொன்னதைப்போல, மலைகள் நிலைத்திருக்கிற வரை யிலும், ஆறுகள் ஓடுகின்ற வரையிலும் அழியாப் புகழுடன் பரிமளிக்கும்.

சோழர்காலத்துக் கோயில் களின் கலையமைப்பு, செப்புத் திருமேனிகள் இன்றும் நம்மைக் கவரும் தெய்வீக அம்சங்கள். அவற்றின் கம்பீரம், முகத்தில் காணும் அமைதி, குறுநகை, இவையெல்லாம் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும், இன்று வடித்தவை போல, பொலி வும், புதுமையும் கொண்டிருக் கின்றன.

30 ஆண்டுகளுக்கு முன்பு நான், தமிழகத்தின் தொழில் அமைச்சராக இருந்தபோது, மாமல்லபுரத்தில் சிற்பக் கலைக் கோயிலில் உள்ளதைப் போன்ற விக்கிரகங்கள் செய்கின்ற கூடத்தை, சுவாமிமலையில் அமைத் தோம். விக்கிரகங்களை மெழு கினால் செய்து, அதற்கு அச்சுகள் வார்த்து, உருகிய பஞ்சலோகத் தைச் செலுத்தினால், மெழுகு உருகி, விக்கிரக வடிவம் அந்த அச்சுகளில் தேங்கிவிடும். இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த முறையைத் தமிழ்நாடு கடைப்பிடித்து வந்தது; எனினும், இருபதாவது நூற்றாண்டில், இதேமுறையை Investment tapping என்ற பெயரில் வெளிநாடு களிலிருந்து பணம் கொடுத்து வாங்கினோம். விஞ்ஞானத்தில் எவ்வளவு முன்னேற்றம் தமிழ் நாடு அடைந்திருக்கிறது என்ப தற்கு இதை ஒரு உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்மொழிக்கு முன்னும் பின் னும் தோன்றிய பல மொழிகள் வழக்கொழிந்து சிதைந்துவிட்டன. இலத்தீன், வடமொழி போன்ற தொன்மையும் சிறப்பும் வாய்ந்த மொழிகள் இப்போது பேசப் படுவதில்லை. ஆனால், தமிழ்

மொழியோ ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும், வலிமையோடும், பொலிவோடும் வளர்ந்து வந்திருப்பதற்குக் காரணம், காலத்திற்கேற்ப மாறுதல்களைத் தமிழ் மொழி ஏற்று, தன்னை விரிவுபடுத்திக் கொண்டு வருவதேயாகும். மேலும், மேல்நாடுகளில் ஏற்படுத்தியிருக்கிற விரிவுகளைத் தமிழ்மொழி ஏற்றுக் கொண்டதன் காரணமாக, தமிழ்மொழியில் பெரிய விரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக, சுகம், துக்கம், லாபம், தவம், ஜெயம், பாவம் இவையெல்லாம் தமிழ்ச் சொற்கள். ஆனால், இவை யாவும் வடமொழியில் இருப்பவை.

சரித்திர, புவியியல் ஆராய்ச்சியாளர்கள் சொல்லி வருகிறார்கள் - வட இந்தியா தோன்றுவதற்கு முன்பே 'லெமூரியா' என்ற ஒரு கண்டம் தமிழ் நாட்டுடன் இணைந்திருந்தது எனவும், அக்கண்டம் கடலில் மூழ்கி விட்டது எனவும், அதற்குப் பின்பு தான் இமயம் தோன்றியது எனவும் ஆராய்ச்சியாளர்கள் கருது கிறார்கள். அப்படியானால், நான் சொன்ன சொற்கள் எல்லாம் தமிழிலிருந்து வடமொழிக்குக் கூடச் சென்றிருக்கலாம் என்பதற்கு இது ஒரு ஆதாரம். அதைப்போல வடமொழியிலிருந்து தமிழுக்கும் வந்திருக்கலாம். சர்ச்சை அதுவல்ல. எப்படி ஒரு மொழி, மற்றொரு மொழியில் இருக்கிற வார்த்தைகள், பொருட்கள், சொற்கள் எல்லாவற்றையும் ஏற்று, தன்னை விரிவுபடுத்திக் கொள்வது என்பதுதான் அதனுடைய முக்கியக் கருத்து.

ஆகவே, பிற சொற்களை நாம் ஏற்பது என்பது, அது எந்த மொழியானாலும் சரி; அது ஆங்கிலமானாலும் சரி, தமிழானாலும் சரி; அதை ஏற்றுக் கொள்வது என்பது ஒரு நல்ல தகுந்த முறை.

இங்கிலாந்து நாட்டின் அரசி, எனக்கு அளித்த விருந்துரையில் கூறினார்கள் - ஆக்ஸ்போர்டு டிக்ஷ்னரியில் 900 வார்த்தைகள் - சொற்கள் இந்தியச் சொற்களாக இருக்கின்றன (900 Indian words are in the Oxford English Dictionary). மொழி வளர்ச்சிக்கு எப்படி பல மொழிகளிலிருந்து நாம் சொற்களை ஏற்க வேண்டும் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

தமிழ்மொழி, பிற மொழிகளிலிருந்து சொற்களை ஏற்றது மட்டுமல்ல; பிற நாடுகளில் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சியையும் அது ஏற்றது. உதாரணமாக, மேல்நாடுகளில் வழங்கிவந்த சிறுகதையும், (Shortstories) நவீனம், நாவல், புதுப்புதுக் கவிதை வடிவங்கள் இவையெல்லாம் தமிழில் ஏற்கமுடியும் என்று புதிய எழுத்தாளர்கள் காண்பித்துள்ளார்கள். கல்கி, புதுமைப்பித்தன், மாளவியா போன்ற எழுத்தாளர்கள் இதற்கு வழிகாட்டியாக இருந்தார்கள். தமிழ், தேங்கி முடங்கிக் கிடக்காமல், புதுப்புது முறைகளைக் கையாண்டு வந்தது என்பதற்கு மற்றொரு சான்று, இலக்கிய விமர்சனம் என்ற ஒரு புது உத்தியை வகுத்துக் கொண்டது. 'Literary Criticism' என்ற மேல்நாட்டு முறையைத் தமிழ் ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொண்டார்கள். நன்கு பரிசீலித்து, சொந்தப் படியெடுத்து, நன்கு பதிக்கப்பட்ட நூல்களை, உ.வே. சாமிநாத ஐயர், எஸ். வையாபுரி போன்ற பெரிய நிபுணர்கள் வெளிக் கொணர்ந்திருக்கிறார்கள். பல கோணங்களிலிருந்து இந்த நூல்களையெல்லாம் ஆராய்ந்து பல விமர்சன நூல்கள் வெளி வந்துள்ளன.

கம்பனின் சொல்திறன், நாடகத் திறன், கவிதைத் திறன், வார்த்தைகளின் பண்பு அமைப்புகள், 'Characterisation' இவற்றையெல்லாம் தனித்தனியாக ஆராய்ந்து, அவற்றின் நயங்களை நமக்கு விளக்கிய அறிஞர்கள் பலர். பழந்தமிழில் உள்ள சொல்நயம், பொருள்நயம், சந்த எழில், உவமை நயம் இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்துவைத்து, பிறர்க்கும் தம் அனுபவத்தை வழங்கியவர்கள் ஸ்ரீலஸ்ரீ கே. சிதம்பரநாதன், திரு கதிரேசன் செட்டியார், பேராசிரியர் பெருமாள் ராகவன், நீதிபதி மகாராஜன், நீதிபதி இஸ்மாயில் போன்றவர்கள்.

இதுவரையிலும் பழங்காலத்தைப் பற்றி நாம் சிந்தித்தோம். இனி, எதிர்காலத்தில் நாம் என்ன

## இரும்புக்கோட்டை

**மனதைப் பொத்தல் குடிசையாக வைத்திராமல், எந்தப் புயலையும் தாங்கும் இரும்புக்கோட்டையாக வைத்திருக்கக் கற்க வேண்டும்.**

**—டாக்டர் மு.வ.**

செய்யவேண்டும் என்பதை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். இந்த நிலையில், விஞ்ஞானம், தொழில் முறைகள், இயந்திரக் கருவிகள், பொறியியல், மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளிலும் தமிழ் மொழி விரிவடைந்து வருவது மிகவும் அவசியம். ஓரளவு விரிவடைந்து வருகிறது என்பதை நான் அறிவேன். இதற்கு, நம் தாய்மொழி, பிறமொழிச் சொற்களைத் தேவையான அளவுக்குத் தனதாக்கிக் கொள்ளவேண்டும் என்பது தெளிவாகிறது.

எந்த அளவுக்குப் பழம் சொற்களின் அடிப்படை புரியும்படியாக, எளிய வார்த்தைகளில் புதிய கருத்துக்களை உணர்த்த முடியுமோ அந்த அளவுக்கு நாம் அதைக் கையாளவேண்டும். மிக வளர்ச்சி அடைந்த நாடுகளை, குறிப்பாக ஜப்பான் போன்றவற்றை நாம் நோக்கினால், அதன் வளர்ச்சியின் முக்கியக் காரணம், அவர்கள் பிற சொற்களைத் தமதாக்கிக் கொள்வதில் தயங்கவில்லை என்பதே.

பல ஆண்டுகளுக்கு முன்பு நான் ஜப்பான் சென்றிருந்தேன். அப்போது தொழிற்சாலை ஒன்றிற்கு அவர்கள் அழைத்துச் சென்றார்கள். கருவிகளைப் பார்த்துக் கொண்டு வருகின்ற போது, நான் ஒற்றைக் 'கேட்டர் பில்லர்' என்று சொன்னேன். எனக்கு, மொழிபெயர்ப்பிற்காக வருகின்றவர் 'உங்களுக்கு ஜப்பானிய பாஷை தெரியுமா?' என்று கேட்டார். 'தெரியாது' என்று சொன்னேன். 'இப்போது கேட்டர் பில்லர் என்று சொன்னீர்களே!' என்று கேட்டார். நான் சொன்னேன் 'கேட்டர் பில்லர்' என்பது ஆங்கிலச் சொல் அதை ஜப்பான் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதனால், நீங்கள் அதை ஜப்பானிய மொழி என்று நினைக்கிறீர்கள்' என்று சொன்னேன். அதைப்போல, கேட்டர் பில்லர் என்பதற்கு நாம் புதிதாக ஒரு தமிழ் தேடி அறிந்து கொள்வதற்குப் பதிலாக, உலகத்தில் எவ்வாறு அந்த முறையை உபயோகிக்கிறார்களோ, அதை நாமும் ஏற்றுக் கொள்வது, மிக சாலச் சிறந்த முறையாகும்.

அறிவியல் ஆராய்ச்சிகளை இன்னும் தமிழ்மொழியிலே செய்து, மொழியிட்டு, அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது சாலச்சிறந்த முறை. இப்போது என்ன நடக்கிறது என்று சொன்னால், நம்முடைய அறிவியல் சிறந்த நிபுணர்கள் எல்லோரும் ஆங்கிலத்தில் எழுதி, அதைத் தமிழில் மொழி பெயர்க்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்வது, நீங்கள் தமிழிலேயே அந்த அறிவியலை எழுதி, பிறகு ஆங்கிலத்தில் வேண்டுமானாலும், பிரஞ்சு மொழியில் வேண்டுமானாலும், அல்லது எந்த மொழியில் வேண்டுமானாலும் வெளியிடலாம். அவ்வாறு செய்வதன் மூலமாக அறிவியல் சொற்கள், தமிழில் இன்னும் அதிகமாகப் பரவுவதற்கு வழி உண்டாகுமென்று நான் நினைக்கிறேன். இது கடினமான வழியல்ல. உதாரணமாக, ரஷ்ய நாட்டிலும், ஜப்பான் நாட்டிலும், பிரஞ்சு நாட்டிலும், ஜெர்மனியிலும், அறிவியல் நிபுணர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் மொழியிலேதான் அறிவியல் சாஸ்திரங்களை எழுதுகிறார்கள்.

## வாழ்க்கை

**உயர்ந்தோர் வாழ்க்கை எல்லாம், நம் வாழ்க்கையை உயர்வுபடுத்தவே உந்துகின்றன.**

**—லாங்பெல்லோ**

அந்த நூல்களைப் பிற நாடுகள் தங்களுடைய மொழிக்கு, மொழி பெயர்த்துக் கொள்கிறார்கள். ஆகவே, இதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

மற்றுமொரு கருத்து என்னிடத்தில் இருக்கிறது. எந்தெந்த மொழிக்குச் சொற்களை - அறிவியல் சொற்களை - தமிழில் பதங்களைக் கண்டுபிடிக்க முடியுமோ, சொற்களைக் கண்டுபிடிக்க முடியுமோ, அவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும். எவற்றுக்கு நம்மால் அதைக் கண்டுபிடிக்க முடியாதோ, அல்லது கண்டுபிடித்ததன் மூலமாக அது நன்றாக மக்களுக்குப் புரியாதோ, அந்தச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். எப்படி 'கேட்டர் பில்லர்' என்ற வார்த்தையை ஜப்பானில் ஏற்றுக் கொண்டார்களோ, அதைப்போல நாமும் அந்தவிதமான அறிவியல் தொழில்நுட்பச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனைத் தனித்தனியாக யாரும் செய்யக் கூடாது. இதற்காக நிபுணர்குழு அமைத்து, அந்த நிபுணர்கள் எந்தச் சொற்களை நாம் மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டும்; என்றவற்றை நிர்ணயம் செய்யவேண்டுமென்று நான். உங்களிடத்தில் சமர்ப்பிக்கின்றேன். தமிழால் முடியும் என்பது என்னுடைய திட நம்பிக்கை. அதைப்போல, அறிவியல் துறையில் நுட்பமான சொற்களைப் பெயர்த்து விடாமல், கூடுமான வரைக்கும் அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் என்னுடைய கருத்து.

# வெற்றி மாநாடு



## மாண்புமிகு இலங்கை
## கால்நடை வளர்ச்சி மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்
## திரு எஸ். தொண்டமான் அவர்கள்

**அ**கில உலகிலும் உள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இலக்கிய ஆர்வாளர்கள், பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பல்துறைத் தமிழ் ஆராய்ச்சிப் பேராசிரியர்களும் தமிழ் நாட்டின் பேராளர்களும் தமிழகத்தில் வாழும் பொதுமக்களும் தமிழக அரசும் ஒன்று சேர்ந்து தமிழ் மன்னர்கள் ஆண்ட தஞ்சையில் கூடி உற்சாகத்தோடு எடுக்கும் உலகத் தமிழ் மாநாடு சீரும் சிறப்பும் பெற்ற ஒரு வெற்றி மாநாடாக- ஒரு வெற்றி விழாவாக விளங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன். என் வாழ்த்தினை இலங்கைத் தமிழ் மக்களின் சார்பிலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பிலும் எனது தனிப்பட்ட முறையிலும் மனப்பூர்வமாக இந்த மாபெரும் சபையில் சமர்ப்பிக்க மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இது உலகில் நடைபெறும் எட்டாவ்து உலகத் தமிழ் மாநாடு ஆகும். இரண்டாம் மாநாடு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே சென்னையிலும், ஐந்தாவது மாநாடு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைமையில் மதுரையிலும் கோலாகலமாக நடைபெற்றன. இந்த எட்டாவது மாநாடு தமிழக அரசின் முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் தலைமையிலே தஞ்சையிலே நடைபெறுகிறதைப் பாராட்டுகிறோம்.

உலகத் தமிழர் அனைவரையும் மொழியின் பெயரால் ஒன்றுபடுத்தும் பலம் வாய்ந்த ஒரு உந்து சக்தியாக மாநாடு அமைய வேண்டும் என்பதே எனது நனவும் கனவும் ஆகும். இந்த நோக்கம் நிறைவேற வேண்டும். உலகில் வாழும் தமிழர்களின் உயர்வுக்கும், தமிழ் மொழியின் நவீன வளர்ச்சிக்கும் இந்த மாநாடு அரிய பல ஆலோசனைகளை முன் வைப்பதோடு, அந்த ஆலோசனைகளையும், தமிழ் வளர்ச்சிக்குத் திட்டங்களையும் உலகமே நன்கு கண்டு பேசக்கூடிய வண்ணம் துரித கதியில் செயல்படுத்த வேண்டும் என்று ஆசி கூறுகிறேன். வளர்க தமிழ்! வாழ்க தமிழ் மக்கள்! வளம் பெற்று உயர்க தமிழக அரசு!



**திருக்குறள் என்னும் சீரிய நூல் - சமயம், காலம், சாதி, இடம் முதலிய வரையறையின்றி, எச்சமயத்தார்க்கும், எக்காலத்திற்கும், எச்சாதியினர்க்கும் எந்நாட்டினர்க்கும் பொதுவாய் உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனி நூலாகத் திகழுகின்றது.**

**–டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை**



# பல்கலைக் கழகங்களில் பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் அறக்கட்டளை

## மாண்புமிகு முதலமைச்சர் ஆணை

சென்னை- கலைவாணர் அரங்கில் 11.11.1994 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் எழுதிய "புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு" புத்தக வெளியீட்டு விழாவில் சிறப்புரை ஆற்றும் போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழ் நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் பல் கலைக்கழகங்களில் பாவேந்தர் பாரதிதாசன் புகழையும் இலக்கியச் சிறப்பையும் உணர்த்தும் வண்ணம், அவரது பெயரில் ஒரு இலட்சம் ரூபாயில் அறக்கட்டளைகள் நிறுவப்படும் என அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ் நாட்டில் அமைந்துள்ள கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் அறக்கட்டளை, பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் ஒரு இலட்சம் ரூபாய் செலவில், அமைப்பதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப் பித்துள்ளார்.

1. மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்
2. அழகப்பா பல்கலைக்கழகம்
3. அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர் கல்வி (கருதப்படும்) பல்கலைக் கழகம்
4. அன்னை தெரசா பெண்கள் பல்கலைக் கழகம்
5. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
6. பாரதியார் பல்கலைக்கழகம்
7. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம்
8. பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைக்கழகம்
9. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

மேலும், தற்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் 25,000 ரூபாய் செலவில் அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளதால், பல்வேறு பணிகளை அந்தச் செலவுக்குள் நிறைவேற்ற இயலவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், சென்னைப் பல் கலைக்கழகத்திற்குக் கூடுதலாக 75,000 ரூபாய் வழங்கி, அந்தப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை, ஒரு இலட்சம் ரூபாய் செலவில் அமையும் வண்ணம் ஆணை பிறப்பித்துள்ளார்.

### வெற்றிக்கு வழி!

எந்த ஒரு காரியத்தையும் பரபரப்புடன் செய்யக்கூடாது. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி, அன்பு ஆகியவை வெற்றிக்கு இன்றியமையாதவை ஆகும்.

—விவேகானந்தர்

### எது பெருமை?

பழங்கள் நிறைந்திருக்கும் மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளைந்திருக்கும்.. அதுபோல நாமும் பெருமை அடைய வேண்டுமானால், எல்லோரிடமும் அடக்கத்தோடும், பணிவோடும் இருக்க வேண்டும்.

—இராமகிருஷ்ண பரமஹம்சர்

# அந்த நாள் இந்த நாள்!

## மாண்புமிகு நிதியமைச்சர்
## டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்



இன்று 1995-ஆவது ஆண்டு புத்தாண்டு, புதுநாள் பிறந்து இருக்கிறது. எட்டாவது உலகத் தமிழ் மாநாடும் தோற்றம் பெற்றிருக்கிறது. இங்கே குழுமியிருக்கும் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் நான் பூரிப்பும் பெருமையும் கொள்கிறேன்.

'உவகை உவகை
உலகத் தமிழ் மாநாட்டால்
வந்து குவியுது நெஞ்சில் உவகை உவகை'

என்ற உவகைப் பெருக்கு கொள்கின்ற அளவுக்கும் 'ஆடுவோமே பள்ளுப் பாடு வோமே, தமிழ் ஆட்சியின் மாட்சியில் கூடு வோமே, ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்று ஆடிப்பாடி மகிழும் வகையில் இங்கே நாம் கூடியிருக்கிறோம். முத்தமிழ் வளர்த்த தஞ்சை மூதூரில் நாம் கூடியிருக்கிறோம். இயற்கலையையும், இசைக்கலையையும், நாட்டியக் கலையையும், நாடகக் கலையையும், சிற்பக் கலையையும், ஓவியக் கலையையும், கட்டடக் கலையையும் சிறப்புற வளர்த்த தஞ்சைத் தரணியில் தீந்தமிழ் வளர்க்க நாம் கூடி யிருக்கின்றோம். உலகத் தமிழர்கள் அத்தனைப் பேரும் ஒன்று கூடியிருக்கின் றோம். நஞ்சை சூழ்ந்த தஞ்சையில், கலைகள் மலிந்த தஞ்சையில், வீரம் செறிந்த தஞ்சையில், வீரம் பொருந்திய தஞ்சையில், வெற்றிகள் பல வற்றை நிலைநாட்டிய தஞ்சையில் நாம் கூடியிருக்கின்றோம்.

தஞ்சை மாநகரமே இன்று விழாக்கோலம் பூண்டிருக்கிறது. படை பெருத்ததால் தஞ்சை சிறுத்ததோ அல்லது தஞ்சை சிறுத்ததால் படை பெருத்ததோ என்று சொல்லுகின்ற அளவுக்கு வெள்ளம் போல் தமிழர்கள் கூடியிருந்து, இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை மிகச் சிறப்புற நடத்துகின்ற அளவிலே ஆர்வமும், அக்கறையும் செலுத்து வது கண்டு நாங்கள் எல்லாம் பூரிப்பும், பெரு மையும் கொள்கின்றோம்.

'வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்
றுடலினால் பலராய்க் காண்பர்
கள்ளத்தால் நெருங் கொணாதே;
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ?'

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதற்கிணங்க, அந்த நாள் இந்த நாள் என்று சொல்லத்தக்க அளவுக்கு உலகத் தமிழர்கள் ஒன்று கூடியிருக்கின்ற தன்மையை யும் நாம் காண்கின்றோம்.

இந்த மண், பராந்தக சோழனும், இராஜ ராஜ சோழனும், இராஜேந்திர சோழனும், குலோத்துங்க சோழனும், கண்டராதித்த சோழனும், விக்கிரம சோழனும் ஆண்டு வீரத்தை நிலைநாட்டிய பூமியாகும். களம் பல கண்டு வென்ற வீராங்கனையாகத் திகழும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களு டைய சீரிய முயற்சியால், எட்டாவது உலகத் தமிழ்

மாநாடு, எழிலோடும், ஏற்றத்தோடும் இங்கே நடைபெறுகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, **1968**-இல் சென்னையில் நடந்தது. பொன்மனச் செம்மல், டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களுடைய காலத்தில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு, மதுரையில் சிறப்புற நடந்தேறியது. இன்று, வெற்றி வீராங்கனையாகத் திகழும் புரட்சித் தலைவி காலத்தில், எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, இங்கே சிறப்புற நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. **1966**-இல் முதல் மாநாடு, கோலாலம்பூரில் நடைபெற்றது. **1970**-இல், மூன்றாவது மாநாடு, பாரீசில் நடைபெற்றது. **1974**-இல் நான்காவது மாநாடு, யாழ்ப்பாணத் தில் நடைபெற்றது. ஐந்தாவது மாநாடு, மதுரை மாநகரில் நடைபெற்றது. ஆறாவது மாநாடு, **1987**-இல் கோலாலம்பூரில் நடை பெற்றது. **1989**-இல் ஏழாவது மாநாடு, மொரீஷியஸ் நாட்டில் நடைபெற்றது. எதை யும் செயற்கரிய முறையில் செய்து காட்டு வதில், இராஜராஜ சோழன், மிக வல்லமை கொண்டவனாகத் திகழ்ந்தான். அதைப் போலவே, டாக்டர் புரட்சித்தலைவி அவர் களும், மிகச் செயற்கரிய முறையில் இந்த மாநாட்டைக் கூட்டியிருக்கிறார்கள்.

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய மூன்றுமே ஊர்வலமாக வந்த காட்சிகளை, நாம் எல்லோரும் சிறப்புறக் கண்டுகளித்தோம். இந்த மாநாட்டிற்குப் பொலிவு சேர்க்கவும், வலிவு சேர்க்கவும் வருகை தந்திருக்கிற பல இலட்சக்கணக்கான மக்களை நான் மனதார வரவேற்கிறேன். உங்களுடைய வருகை, மிகச் சிறப்புற அமைக என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அனை வரும் வாரீர், வாரீர் என அழைக்கிறேன்.

"வெற்றி முரசு கொட்டுவீர் வீர எக்காளம் ஊதுவீர்! எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கை முழங்குவீர்."

'திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும், மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்; ஆண்மைச் சிங்கத்தின் கூட்டம் என்று சிறியோர்க்கு ஞாபகம் செய்ய, நாம் முழங்குகிறோம்.

'வெங்கொடுமை சாக்காட்டில் விளை யாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள்; கங்கையைப் போல், காவிரியைப் போல், கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம்; செங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ் எங்கள் மூச்சாம், அந்த வீர நடை போடுகின்ற இந்த மாநாடு, சிறப்புற நடை பெற உங்கள் அனைவரையும் மீண்டும் மீண்டும் வருக, வருக என்று வரவேற்பதிலே நான் பூரிப்படைகின்றேன்; பெருமைப்படு கின்றேன் என்று கூறி, உங்கள் அனை வரையும் வரவேற்பதிலே பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

## இராசராசன்

இராசராசனின் 30 ஆண்டு ஆட்சிக்காலம் சோழர் ஆட்சியை விரிவுற்ற மிகப் பெரிய பேரரசாகவும் திகழவைத்த காலமாகும். நிர்வாகத் திறன் போர்ப்பயிற்சி, கலை, சமயம், இலக்கியம் ஆகிய பல்துறை அறிவும் வாய்க்கப் பெற்றவன்.

**—கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி**

சோழ இராச்சியத்தின் வளர்ச்சிக்கு முதற் காரணமாக இருந்தது, சோழர் குடியில் தோன்றிய அரசர்களின் ஆற்றலேயாம். அத்தகைய ஆற்றலமைந்த சோழ மன்னர்களுக்குள் முதல் இராசராசன் தலைமை வாய்ந்தவன்.

**—தி.வை. சதாசிவப் பண்டாரத்தார்**

சோழ மன்னர்களில் முதன் முதலில் இராசராசன், இராசேந்திரன் ஆகியோர் கடல் கடந்த நாடுகளைப் பிடித்து ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தும் கொள்கையுடையவராய் இருந்தனர். இந்தியாவின் கீழைக் கடல் பகுதிகளையும் கங்கையையும் வெற்றி பெற்று, இந்தியாவில் மிகப் புகழ் மிக்க பேரரசுகளுள் சோழப் பேரரசும் ஒன்று என்று கருதும்படிச் செய்தவர்.

**—ஏ.எல். பாஷ்யம்**

# தமிழ் வரலாற்றின் தொடர்ச்சி

## மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள்

**த**மிழ் மொழிக்கு 2500 ஆண்டுகள் வரலாறுகள் கண்டு பிடிக்கப்பட்டு, நம்முடைய சான்றோர்களாலும், தமிழ் அறிஞர்களாலும் சொல்லப்பட்டு வருகிறது. அந்த வரலாற்றுத் தொடரில், தொடர் நிகழ்ச்சியில் நம்முடைய தமிழ் மொழி மிகச்சிறந்த இலக்கியங்களைப் பெற்று உலகத்தில் நிகரற்ற சாதனைகளைப் படைத்து இன்றுவரை புதிய புதிய வரலாறுகளைப் படைத்துக் கொண்டு வருகிறது.




பல்வேறு நூற்றாண்டுகளில் அந்த அந்த நூற்றாண்டுகளிலே வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்களால் உருவாக்கப் பெற்ற இந்த நாட்டிற்கு, உலகிற்கு வழங்கப்பெற்ற தமிழ் இலக்கியங்கள் இன்றைக்கும் உலகத்திலே மிகச் சிறந்த மொழியாக தமிழைப் பாதுகாத்துக் கொண்டு வருகிறது. அப்படி வரலாறு தொடர்ந்து படைத்துக் கொண்டு வருகின்ற சாதனைகளில், இந்த நூற்றாண்டிலே நம்முடைய தமிழகத்தில் மூன்று முறை உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்ற சரித்திரத்தைப் படைத்துக் கொண்டிருக்கின்றன.

தமிழினுடைய 2500 ஆண்டுக் கால வரலாற்றின் தொடர்ச்சி தான் இந்த உலகத்தமிழ் மாநாடுகள் ஆகும். சமுதாயத்திலே நடைபெறுகிற பல்வேறு நிகழ்ச்சிகள் அப்பொழுது தோன்றுகிற பிரச்சினைகளுக்காகவும், மக்களுடைய தேவைகளுக்காகவும் பல நேரங்களிலே அதற்கான காரியங்கள் நடைபெற்று வருகின்றன. என்றாலும், இந்த உலகத் தமிழ் மாநாடு என்பது கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடிப் பிறந்தவர்கள் என்று பெருமையோடு சொல்லப்படுகிற தமிழின் வரலாற்றோடு, 2500 ஆண்டுக் கால வரலாற்றோடு, இணைந்து இருக்கின்ற, இணைந்து வருகிற வரலாற்று அத்தியாயங்கள் ஆகும்.

68-ஆம் ஆண்டிலே இந்த நாட்டிற்குக் கிடைத்த ஒப்பற்ற தலைவராக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் நடத்திய உலகத் தமிழ் மாநாடும், அதற்குப் பிறகு 81-ஆம் ஆண்டிலே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் நடத்திய

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடும், அதைத் தொடர்ந்து இப்பொழுது எழுச்சியோடும், இதுவரை இல்லாத அளவிலேயும், உலகம் வியக்கின்ற வகையிலேயும், எப்படித் தமிழ் மக்களும், தமிழ் மொழியும் உயர்ந்து விளங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ, அதைப் போலவே இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாடும்-ஈடு இணையற்ற நம்முடைய முதலைமைச்சர், தமிழ் மக்களுடைய தலைவராக விளங்குகின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெருமுயற்சியாலும், சீரிய ஆற்றலாலும், அவர்களுக்குள்ள மிகச் சிறந்த பண்பினாலும், உலகமே வியக்கின்ற வகையில், உலகம் புகழ்கிற எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆகவேதான், உலகத் தமிழ் மாநாடுகள் என்பது, தமிழ் மொழியினுடைய வரலாற்றோடு இணைந்து, வரலாற்றிலே அவைகள் ஒரு அத்தியாயங்களாக மாறிக் கொண்டு வருகின்றன. அப்படித் தமிழகத்தினுடைய வரலாற்றை, தமிழ் மொழியினுடைய வரலாற்றை எழுதுவதற்குள்ள உரிமையை இந்த நூற்றாண்டில் தமிழ் அன்னை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு வழங்கியது. அதற்குப் பிறகு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு வழங்கியது. இன்றைக்கு அவர்களுடைய வழித்தோன்றலான மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு வழங்கி இருக்கிறது.

நான் இதைச் சொல்லுவதற்குக் காரணமே, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் மாத்திரம் அல்ல; தமிழ் பேசுகிற உலகின் எல்லாப் பகுதி மக்களும் எழுச்சியோடு எண்ணிப் பெருமிதம் கொள்ளுகின்ற இனிய நிகழ்ச்சியாக இந்த உலகத் தமிழ் மாநாடு அமைந்துள்ளது; அறிவுலகப் பேராசான் நமது ஆருயிர் அண்ணன் பன்னிரு ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிறகு, பாரிசிலும், யாழ்ப்பாணத்திலும் மாநாடுகள் நடைபெற்றன. அண்ணன் ஏந்திய ஒளிவிளக்கினை, காலத்தின் கட்டளையாக அவருக்குப் பிறகு ஏந்துகிற பொறுப்பினை ஏற்றுக் கொண்டு, அவரின் அன்புத் தொண்டனாக நானும் வரலாற்றில் அழியாத இடம் பெற்றிடப் போகும் இந்த ஐந்தாவது உலகத் தமிழ் மநாட்டைக் கொண்டாடுவதில், கோலாகலப் பெருவிழாவாகக் காண்பதில், மறைந்த தமிழகத்தின் புகழை மீண்டும் நிலைநாட்டிக் காட்டுவதில் தமிழன் தானும் தாழான், எவரையும் தாழ்த்தான் என்பதனை அகிலத்திற்கு அறிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன் என்று 81-ஆம் ஆண்டிலே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்தார்களே, அது இன்றைக்கும் நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

வரலாற்றின் தொடர்ச்சியாகத்தான், பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு 13 ஆண்டுகள், நம்முடைய புரட்சித் தலைவருக்குப் பிறகு 14 ஆண்டுகள் கழித்து காலம், யாரால் இந்தக் காரியம் நடைபெற வேண்டு

# பொன்மொழிகள்

**கலையின் பயன்...**

**கலையின் பயன் இரண்டு. ஒன்று, கிடைக்கும் சிறுசிறு ஒய்வுக் காலத்தை இன்பமாகக் கழிக்கச் செய்வது. மற்றொன்று, நம்மை அறியாமல் வாழ்க்கையைத் திருத்தி உயர்த்துவது.**

**கலை என்பது...**

**கலை என்பது உள்ளத்து உணர்ச்சிகளை வளர்த்துப் பண்படுத்துவது.**

**கலை என்றால் உள்ளதை உள்ளபடியே காட்டுவது அல்ல. உள்ளம் உணர்ந்து உயரும் வகையில் காட்ட வேண்டும்.**

**சிறந்த கலையின் தன்மை...**

**உண்ணும் சிற்றுண்டி சுவை நுகர்வுக்காகவே என்று அமைவதைவிட, உடல்நலத்திற்காகவும் உயிராக அமைவதே சிறப்பு ஆகும். கலையும் இன்பப் பொழுதுபோக்குக்காக மட்டும் அல்லாமல், வாழ்க்கைப் பண்பாட்டுக்காகவும் உதவ வேண்டும். அதுதான் சிறந்த கலையின் தன்மை ஆகும்.**

**—டாக்டர் மு.வ.**

மென்று தீர்மானிக்கிறதோ, அந்த ஆற்றல் மிக்க தலைவர்களிடத்திலே இந்தப் பொறுப்பை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்களிடத்தில், அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்தில், அதற்குப் பிறகு இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே இவ்வளவு ஆற்றல் மிக்க இந்தத் தமிழ் மொழியின் வரலாற்றை உருவாக்குவதில், இதற்கு ஒரு புதிய அத்தியாயம் படைப்பதில், புதிய சகாப்தத்தை உருவாக்குவதில் இன்றைக்கு நம்முடைய தமிழ் மக்களின் ஒரே தலைவியாக விளங்குகிற, இந்திய நாட்டின் இணையற்ற தலைவர்களிலே ஒருவராக, ஈடு இணையற்ற தலைவராக விளங்குகிற நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்தில், காலம் தமிழின் பாதுகாப்பை, தமிழின் வளர்ச்சியை, தமிழின் எதிர்காலத்தை, தமிழ் சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கான அந்தப் பொறுப்பை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறது. அதனுடைய வெளிப்பாடுதான் இவ்வளவு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற எட்டாவது உலகத் தமிழ் மாநாடு ஆகும்.

'பண்டைய இலக்கியம்' என்ற தலைப்பிலே நீங்கள் இங்கே தர இருக்கின்ற கருத்துக்கள், இந்தக் கருத்துக்களைப் பற்றிச் சிந்திக்கிறபொழுது பண்டைய இலக்கியம் என்று நீங்கள் சொன்னால், நீங்கள் எங்களுக்குச் சொல்லியிருக்கிறீர்கள், சங்க காலம் என்றும், அதற்கு முன்னாலே இருக்கிற காலம் என்றும், அதற்குப்பிறகு வருகிற இலக்கியங்களுக்கெல்லாம் ஒவ்வொரு நூற்றாண்டிலேயும் வளர்ந்து வருகிற இலக்கியங்கள், வளர்ந்து வருகிற தமிழ் உணர்வுகள், வளர்ந்து வருகின்ற தமிழ் மொழி எப்படி இலக்கியங்களாக உருவெடுத்து நமக்குத் தரப்படுகிறது என்பதை இருபதாம் நூற்றாண்டு வரையிலே நீங்கள் எங்களுக்குச் சொல்லியிருக்கிறீர்கள்.

சங்க இலக்கியங்கள் 500- கி.மு. 500 முதல் கி.பி.200 வரையில் அகம், புறம் பற்றிய இலக்கியங்களைக் காட்டுகிறீர்கள். அதற்குப் பிறகு கி.பி.100 முதல் கி.பி.500 வரையில் நீதி இலக்கியங்களைக் காட்டுகிறீர்கள். அதற்குப் பிறகு பழைய காப்பியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற காப்பியங்களைத் தருகிறீர்கள். அதற்குப் பிறகு அதை இடைக் காலம் என்கிறீர்கள். அதிலே பக்தி இலக்கியங்கள் 600 முதல் 900 வரை என்கிறீர்கள். அதற்குப் பிறகும் காப்பிய இலக்கியங்கள் 900 முதல் 1200 வரை என்று தருகிறீர்கள். அதற்குப் பிறகு 1200 முதல் 1500 வரையில் உரை நூல்கள் தமிழ் இலக்கியத்திலே வருகின்றன என்று தெரிவிக்கிறீர்கள். அதற்குப் பிறகு 1500 முதல் 1800 வரையில் புராண இலக்கியங்கள் என்று தருகிறீர்கள். அதற்குப் பிறகு, சென்ற நூற்றாண்டு. சென்ற நூற்றாண்டிலே வள்ளல் இராமலிங்கர், வேதநாயகர் முதலிய மிகப்பெரிய இன்றைய உலகத்தோடு இணைத்துக் கொண்டிருந்த தமிழறிஞர்களும், இந்த நூற்றாண்டிலே நம்முடைய மகாகவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன், மற்ற எழுத்தாளர்கள், கவிஞர்கள் தேசிய விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், இப்பொழுது வாழ்ந்து மறைந்த கவியரசு கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் போன்ற கவிஞர்களும், வாழ்ந்து கொண்டிருக்கின்ற புதிய கவிஞர்களும் இன்றைக்குத் தமிழை இலக்கியம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இன்றைக்கு நாம் பண்டைய இலக்கியம் என்ற தலைப்பிலே நீங்கள் எடுத்துச் சொல்கிற கருத்துக்களானாலும் சரி, அதற்குப்பிறகு வருகிற நீதி நூல்களானாலும் சரி, அதற்குப் பிறகு தமிழுக்கு, ஏதோ, எங்கேயோ ஒரு ஆபத்து வருகின்ற பொழுது அதற்காகப் போராடுகிற இலக்கியமாக மாறுகிற பொழுதும் சரி, அதற்குப்பிறகு சமயத்தை வளர்க்கின்ற ஒரு இலக்கியமாக மாறுகிற நேரத்திலும் சரி, அது பிறகு புராணமாக மாறுகின்றபொழுதும் சரி, அதிலேயிருந்து விடுபடுகிற 19-ஆம் நூற்றாண்டின் இலக்கியமானா

**சிந்தனை செய்!**

**எதையும் சிந்தித்து, பகுத்தறிவுக்கு எது பொருத்தமோ 'அதை மட்டும் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்!**



லும் சரி, இந்த நூற்றாண்டானாலும் சரி, நாம் எந்த இலக்கியத்தை, எந்த அளவிற்கு மக்களிடத்திலே சொல்ல விரும்புகிறோம் என்பதைத் தமிழறிஞர்கள் அருள்கூர்ந்து தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பண்டைய இலக்கியங்களைப் பேசுகிறபொழுது, இன்றைக்கு நாகரீக யுகத்தில், விஞ்ஞான யுகத்திலேவாழ்கிறவர்கள், நீங்கள் பழம் பெருமையைப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே என்று சொல்கிறார்கள். நாம் பழம் பெருமையைப் பேசி அதிலே திருப்தி அடைவதற்காக நாம் பண்டைய இலக்கியத்தைப் பேசவில்லை.

உலகம் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து கொண்டிருந்தபொழுதே தமிழகமும், தமிழனும் மிகச் சிறந்த நாகரீகத்தைப் பெற்றான்; நாகரீகத்தை மாத்திரம் அல்ல, அறிவாற்றலைப் பெற்றான். அறிவாற்றலை மாத்திரம் அல்ல, அறிவுள்ளவனாக மாத்திரம் இருந்தால் அவன் சிறந்தவனாகிவிட முடியாது, ஒழுக்கமுள்ளவனாகவும் வாழ்ந்தான். அத்ற்கு இலக்கியங்கள் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன என்று நீங்கள் எடுத்துக் காட்டுகிற இலக்கியங்களை இந்த நூற்றாண்டிலே வாழ்கிற எங்களைப் போன்றவர்களுக்கு, சாதாரண மக்களுக்கு அல்லது உலகத்திலே தமிழிலே என்ன இருக்கிறது என்று கேட்கிறார்களே, அவர்களுக்கு எடுத்து விளக்குவதற்காக மாத்திரம் இந்தக் கருத்துக்களைச் சொல்லுகிறோமா? இல்லை, இல்லை; அந்தக் காலத்து வாழ்க்கையை மீண்டும் கொண்டு வருவதற்காகச் சொல்லுகிறோம் என்று நாம் எண்ணுகிறோமா? என்பதை ஒரு குழப்பத்திற்கிடையிலே தமிழறிஞர்கள் இதைப்பற்றி மக்களிடத்திலே பேசி முடித்துவிட்டு, தங்களுடைய கடமை தீர்ந்து விட்டது என்று போய் விட்டால், அதனாலே தமிழ்நாட்டிற்கும் பலன் கிடைக்கவில்லை, தமிழ்மொழிக்கும் பலன் கிடைக்கவில்லை. எந்தக் கருத்திலே இந்த இலக்கியங்களை எங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறீர்கள்?


நாம் இப்படி இருந்தோம், எப்படி ஆகிவிட்டோம் என்றா? அன்றைக்கு இருந்ததைவிட இன்றைக்கு வளர்ந்திருக்கிறோமா? வளர்ந்திருந்தால் எந்தத் துறையிலே வளர்ந்திருக்கிறோம்? இலக்கியத்திலே வளர்ந்திருக்கிறோமா? மொழியிலே வளர்ந்திருக்கிறோமா? இல்லையா? என்பதைத் தமிழறிஞர்கள் எங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பேராளர்கள் இந்த மாநாட்டிற்கு வந்திருக்கிறார்கள் என்றால், உலகத்திலே வாழ்கிற தமிழர்களுக்கெல்லாம் விழிப்புணர்ச்சி வந்திருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டிலே வாழ்கிற தாய்த் தமிழ் நாட்டிலே வாழ்கிற நமக்கு அந்த விழிப்புணர்ச்சி குறைந்து கொண்டிருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதற்காகத் தான் இந்த மாநாடு; அதற்காகத் தான் இந்தக் கருத்தரங்கங்கள், பட்டிமண்டபங்கள், கவிதை அரங்குகள்.

ஆகவே, இந்த உணர்ச்சியை உருவாக்குகிறபொழுது, நாங்கள் உங்கள் முன்னாலே உங்கள் சிந்தனைக்கு நான் வைப்பது, நீண்டகால வரலாற்றைத் தமிழ் மொழி பெற்றிருக்கிறது. அந்த வரலாற்றைப் பெற்றிருக்கிற மொழி இன்றைக்கிருக்கிற இந்த இயற்கையோடு, இந்த உலகத்தோடு, இந்த வேகமான உலகத்தோடு நம்மை இணைத்துக் கொண்டிருக்கிறோமா என்பதைப் பற்றித்தான் காலையிலே கருத்துக்கள் வழங்கப்பட்டன. அதற்கு நம்முடைய தமிழறிஞர்கள் உட்கார்ந்து தமிழ் தமிழ் தமிழ் என்று பேசுகிறபொழுது நாம் இந்தத் தமிழை எந்த இடங்களில் எல்லாம் பயன்படுத்துகிறோம், எப்பொழுது பயன்படுத்துகிறோம்? தேவையான இடத்திலே தமிழ் அல்லாத மொழிகளிலே பேசுவதிலே பிழை இல்லை. ஆனல், எங்கே தேவை இல்லையோ அங்கேயெல்லாம் கூட நாம் தமிழை விட்டு விடுகிறோம். ஆகவே, அப்படிப்பட்ட உணர்வுகளை நாம் சொல்லுகிறபொழுது என்ன கேட்கிறார்கள் என்றால், உங்களுடைய தமிழிலே என்ன இருக்கிறது? தமிழிலே எல்லாம் இருக்கிறது என்று இன்றைக்குச் சொல்லவில்லை.

**எது புத்தகம்?**

**எல்லாப் புத்தகங்களையும் விடச் சிறந்த புத்தகம், இந்தப் பரந்த உலகம்தான். உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.**



நம்முடைய முதலைமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். மூன்று தமிழ்-இயல், இசை, நாடகம் என்று மாத்திரம் சொல்லிக் கொண்டிருக் கிறோம். நான்காவது அறிவியல் தமிழையும் சேர்த்து உருவாக்கு வதற்குத் தமிழறிஞர்களே முயல வேண்டும் என்று கேட்டுக் கொண் டார்கள். அந்த அறிவியல் தமிழை உருவாக்குகிற முயற்சியிலே நாம் ஈடுபடாமல் இல்லை. 160 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்த, பூமி சாஸ்திரம் என்கிற பெயராலே, தமிழிலே நூல் வந் திருக்கிறது. இலங்கையிலே மருத் துவத் துறையைப் பற்றிய நூல் 100 ஆண்டுகளுக்கு முன்னாலே வந் திருக்கிறது. ஆனால், முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, ஆனால் இடையிலே முறிந்து போய் இருக்கின்றன. ஏன்? யாரால்? தயவு செய்து தமிழறிஞர்களே, கண்டுபிடித்துச் சொல்லுங்கள், எங்கே குறை இருக்கிறது என் பதைச் சொல்லுங்கள்.

நம்முடைய அருமை நண்பர் அப்துல் சமத் அவர்கள் ஒரு அற் புதமான கருத்தைச் சொன் னார்கள். தமிழன் ஒருவன்தான் உலகம் என்ற பரந்த நோக்கிலே பார்த்தால், உலகத்திலே அவன் பின்பற்றுகிற அல்லது போற்றுகிற அராபிய நாட்டுக்காரன் கூட, அந்த மொழி பேசாதவனை ஊமை என்று தான் சொன்னான். ஆனால், தமிழன் ஒருவன்தான் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று சொன்னான் என்று சொன்னார்களே, அந்தத் தத்து வங்கள் ஒன்றுதானா? உலகம் என்றுதானே நம்முடைய இலக் கியங்களே தொடங்குகிறது. 'உலகம் உவப்ப' என்று தானே பத்துப்பாட்டிலே முதற் பாட்டு. 'உலகெலாம்' என்று தானே பெரியபுராணம் தொடங்குகிறது. 'உலகம் யாவையும்' என்று தானே கம்பராமாயணம் தொடங்குகிறது. 'உலகத்தீரே! உலகத்தீரே!' என்று தானே கபிலர் அகவல் தொடங்கு கிறது. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதும் நம்முடைய திருமூலர் தந்த வாக்குத் தானே? 'யாதும் ஊரே யாவரும் கேளிர் தமிழ்க் கவிஞன் சொன்னது தானே! ஏன்? 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றும் நம் முடைய திருமூலர் தானே சொன் னார். கவே முடியாது என்று சொல்லிக் கொண்டிருந்த காலத்தில், நம் முடைய தமிழ்க் கவிஞர்கள் 2000, 1500 ஆண்டுகளுக்கு முன்னாலே இதற்கு அணு என்று பெயர் கொடுத்து, இதைப் பிளக்க முடியும் என்றும்பாடியிருக்கிறார் களே, 'அணுவைப் பிளந்து ஏழ் கடலைப் புகுத்தி' என்று ஔவையார் பாடுகிறாரே,' அணு வைப் பிளக்க முடியும் என்கிற சிந்தனை இருந்திருக்கிறது. 'அணு என்ற பெயர் இருக்கிறது. இப்படித் தானே புற்றுநோய். அதற்கு இன்றைக்கும் அவன் ஆங்கிலத்திலே எதனாலே பெயர் சொன்னான் 'கேன்சர்' என்று.

**பெண் கல்வி**

**பெண் கல்வி நாட்டில் எந்த அளவிற்கு உயர்கின்றதோ, அந்த அளவிற்கு நாடு மேம்பாடு அடைகின்றது என்று பொருள்.**

**—பேரறிஞர் அண்ணா**

இவ்வளவு உலகக் கண்ணோட் டத்தோடு பார்த்தவன் உல கத்திலேயே தமிழன்தான். அதைப் போல தமிழ் மொழி தான். அதை இன்றைக்கு நாம் உலகத்திற்கு எடுத்துச்சொல்லுகிறோமா? அது தான் இந்த உலகத் தமிழ் மாநாட் டினுடைய பயன். அது மாத்திரம் அல்ல. நம்முடைய மொழியிலே அறிவியல் கருத்துக்கள் இருந்ததா இல்லையா? நம்முடைய தமிழ் மொழியைப் பற்றிச் சொல்லுகிற பொழுது, ஒவ்வொரு மொழிக்கும் ஒரு சிறப்பைச் சொல்லிவிட்டுத் தமிழைப் பக்தி மொழி என்று சொல்லுவதாக அறிஞர்கள், நம்முடைய தமிழ்ப் பெருமக்களே பாராட்டுகிறார்கள். தமிழ் மொழி என்ன பக்தி மொழி மட்டும் தானா?

அன்றைக்கு அணுவைப் பிளக் தெரியவில்லை, ஆனால், புற்று எங்கே தோன்றுகிறது என்று தெரியாது, அப்படித் தமிழன் பெயரைக் கொடுத்திருக்கிறான். ஆகவே, பெயரைக் கொடுத்திருக் கிறபொழுதே அந்த நோயைத் தெரிந்திருக்கிறான், அதற்கு மருத் துவத்தையும் தெரிந்திருக்கிறான், ஆனால், இடையிலே விட்டு விட் டோம். அது அந்நியர் ஆட்சி யினாலே விட்டுவிட்டோமா, வேறு ஆதிக்கங்களினாலே விட்டு விட்டோமா? அதைப்பற்றி ஆராய்ந்து பலன் இல்லை, ஆனால், தமிழிலே இருக்கிறது அறிவியல், தயவு செய்து தமிழைப்பற்றிப் பேசுகிறபொழுது அதைக் கொஞ்சம் சொல்லுங்கள்.

திருவாசகத்திற்கு உருகாதார் இல்லை என்று சொல்லிப் பலன்

இல்லை, திருவாசகத்திலே இருக்கிற அறிவியல் கருத்துக்கள், கம்பனுடைய பாடலிலே இருக்கிற உவமை நயங்கள், கற்பனைகள், இவை எல்லாவற்றையும்விட சதையைக் கூறு போடலாம் என்று சொல்லுகிறானே, அணுவைப் பிளக்கலாம் என்று கம்பன் பாடுகிறானே அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லுங்கள்.

ஆகவே, தமிழ் ஒரு உயிருள்ள மொழி என்பது மட்டுமல்ல; ஒரு ஆற்றல்மிக்க மொழி என்பது மட்டுமல்ல; அது இந்த நாட்டிலே நட்பை, தோழமையை, அன்பை, பாசத்தை வளர்க்கிற மொழி என்பதை மட்டுமல்ல; அறிவியலிலேயும், இரண்டாயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்னாலேயே சிறந்த மொழி என்பதை இலக்கியங்களிலேயிருந்து எடுத்துச் சொல்லுங்கள். அதற்குப் பிறகு நீங்கள் மொழி மாற்றங்கள் அல்லது எந்தப் பெயரிலே அழைப்பது என்பதையெல்லாம் தீர்மானித்துக் கொள்ளலாம்.

தமிழ் உணர்வை நாம் உண்டாக்கி ஆக வேண்டும். உலகத்திலே இருக்கிற தமிழ் மக்களெல்லாம் இன்றைக்கு விழித்தெழுந்து கொண்டிருக்கிறார்கள்; உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்; தாய்த் தமிழகத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தமிழகத்திலே வாழ்கிற தமிழறிஞர் பெருமக்கள், அவர்களுக்கு மிகப் பெரிய கடமையிருக்கிறது இந்த நூற்றாண்டிலே. அடுத்த நூற்றாண்டைத் தொடங்கப் போகிறோம். அடுத்த நூற்றாண்டிற்கு நம்முடைய தமிழை அறிவியல் தமிழாக அறிமுகப் படுத்தப் போகிறோம் என்று சொல்லுகின்ற நேரத்திலே, இதுவரை இல்லை என்கிற உணர்வைத் தயவு செய்து நாமே உருவாக்கத் தேவையில்லை. ஆகவே, அருள்கூர்ந்து நீங்கள் சொல்லுகிற அந்த இலக்கியங்களிலேயிருந்து இருக்கிற உலகக் கருத்துக்கள், உலகத்திலே யாரும் சொல்லாத காலத்திலேயே, சிந்திக்காத காலத்திலேயே சொன்ன கருத்துக்கள் இவைகளெல்லாம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லுங்கள்.

இளைஞர்களுக்குத் தமிழ் உணர்வை ஊட்டுவதற்கு என்ன வழி என்பதைக் கண்டுபிடித்துச் சொல்லுங்கள். கல்லூரிகளிலே, பள்ளிகளிலே தமிழைப் படிப்பது என்றாலே எதற்குப் படிப்பது என்று கேட்கிற நிலைமையை மாற்றுவதற்கும் வழி சொல்லுங்கள். நம்முடைய மொழி எல்லாச் செல்வங்களையும் பெற்ற மொழி; எல்லாச் சிறப்பையும் பெற்ற மொழி. ஆனால், அதைத் தெரிந்து கொண்டவர்களும் இருக்கிறார்கள்; ஆனால், எடுத்துச் சொல்ல முடியாத சூழ்நிலைக்கு ஏன் ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பதைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை. அதற்குத்தான் உலகத் தமிழ் மாநாடு.

2500 ஆண்டுக் கால வரலாற்றில் இந்த உலத் தமிழ் மாநாடுகள் என்பதும் ஒரு அத்தியாயம். அந்த அத்தியாயங்களைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள்; அதைத் தொடர்ந்து புரட்சித் தலைவர் எழுதினார். இன்றைக்கு இந்த நாட்டின் மாபெரும் தலைவராக, தமிழ் மக்களின் தலைவராக விளங்குகிற பேரறிஞர் அண்ணா, அதற்கு முன்னாலே தந்தை பெரியார், அதற்குப் பிறகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழிவழியாக உருவாக்கித் தந்திருக்கிற, வளர்த்துக் கொண்டிருக்கிற தமிழ் உணர்வை, தமிழ்ச் சமுதாயத்தினுடைய பாதுகாப்பை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்தில் இந்தத் தமிழ் ஆக்கமும், ஊக்கமும் பெறும் என்பது மட்டுமல்ல; தமிழ், உலகத்திலே இருக்கிற மொழிகளோடு சமமான மொழி என்று சொல்லி பாராட்டுவதோடு நின்றுவிடாமல், அது நடைமுறையிலேயும் இந்த மொழிக்கு இணையான, ஈடான, இதை வெற்றி கொள்கிற மொழி இல்லை என்பதை எல்லாத் துறைகளிலேயும் நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய பண்டைய இலக்கியங்களிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால்,. பண்டைய இலக்கியங்கள் என்பது சங்க காலத்தோடு நின்றுவிடுவதா? அதற்குப் பிறகு களப்பிரர் காலத்தோடு நின்றுவிடுவதா? அதற்குப் பிறகு காப்பிய காலம் வரை வருவதா? அதற்குப் பிறகு புராண இலக்கியங்களுக்கு வருவதா? என்பதே குழப்பம். ஆனால், இப்படியெல்லாம் இருந்த தமிழ் இன்றைக்கு இப்படி வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை எங்களுக்கு அடையாளம் காட்டுகிற முயற்சியிலே அறிஞர் பெருமக்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

# நூல் நயம்

### தி.க.சி.யின் திறனாய்வுகள்

ஆசிரியர்: தி.க. சிவசங்கரன்

வெளியீடு: கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க் டவுன்,
சென்னை 600 003

பக்கம்:329 விலை ரூ.50

விமர்சனம் என்பதே ஒரு கலைதானே? அதுவும் ரசனையுடன் கூடிய விமரிசனம் எழுதுவதற்கு ஆழ்ந்த அறிவும், அகலமான அனுபவமும் வேண்டும். இலக்கிய விமர்சனத்தின் முன்னோடியாக வ.வே.சு. ஐயர் அவர்களைக் கூறுவார்கள். அவரைத் தொடர்ந்து புதுமைப் பித்தன், க.நா. சுப்ரமண்யம், சி.சு. செல்லப்பா, டி.கே.சி., தொ.மு.சி. ரகுநாதன் இவர்களைத் தொடர்ந்து தி.க. சிவசங்கரன் என்று ஒரு விமர்சகர்களின் பட்டியலே உள்ளது.

தி.க. சிவசங்கரன் 1950-களிலிருந்து தனது கருத்துக்களை எழுதி வந்திருக்கிறார் என்றாலும், இந்நூலில் 1956 லிருந்து பல்வேறு இதழ்களில் எழுதிய கட்டுரைகளே இடம் பெற்றுள்ளன.

மணிக்கொடி எழுத்தாளர்கள் சிலரைப்பற்றிய கட்டுரைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அத்துடன் தற்கால இலக்கியப் படைப்பாளிகள் பற்றிய கட்டுரைகளும் இடம்பெற்றிருக்கின்றன. இலக்கிய ஆர்வலர்கள் படித்துப் பயன்பெறத் தக்கக் கருத்துரைகள், நூல் முழுவதும் விரவியுள்ளன.

-மறைமலை

### தர்மத்தின் குரல்

ஆசிரியர்: ஞா. மாணிக்கவாசகன்

வெளியீடு: சகுந்தலை பதிப்பகம்
58, ஐயப்ப செட்டித்
தெரு, சென்னை 600 001

பக்கம்:224 விலை ரூ.30

மகாபாரதம், ஒரு மாபெரும் இதிகாசச் செல்வமாகும். மனிதன் தன் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளும் வகையிலே, அரிய பல கருத்துக்களை உள்ளடக்கியதுதான் பாரதக் கதையாகும். இதில் வரும் கீதோபதேசம் கீர்த்திமிக்கது. இந்தக் கருத்துக்களையெல்லாம், எல்லாத் திறத்தாரும் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையிலே இனிய எளிய தமிழில் எழுதியுள்ளார் நூலாசிரியர்.

### மணற்கேணி

ஆசிரியர்: டாக்டர்
நா. செயப்பிரகாசு

வெளியீடு: அருள்ஒளி பதிப்பகம்
20 அ, ஐந்தாம் தெரு,
வள்ளுவர் கோட்டம்
சென்னை 600 034

பக்கம்:132 விலை ரூ.20

மனித வாழ்க்கை மேடு பள்ளம் நிறைந்தது. அவற்றையெல்லாம் கடந்து, அவன் மேதினிக்குப் பயன்பட வேண்டும். நோக்கம், குறிக்கோள், இலட்சியம் என்றெல்லாம் மனிதனின் பேச்சும் எழுத்தும் மட்டும் இருந்து என்ன பயன்? அவை நடைமுறைக்கு வர வேண்டாமா? இவை பற்றியெல்லாம் சிந்திக்க வைக்கிறது இந்நூல்.

குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, பொது வாழ்வு ஆகிய நிலைகளில் மனிதன் நடந்து கொள்ளும் விதம் இந்நூலில் கோடிட்டுக் காட்டப்படுகிறது. பெற்றோரின் நோக்கும் போக்கும், கடமையும் கருத்தும் மிகத் துல்லியமாகக் காட்டப்பட்டிருக்கிறது. பொதுவாகக் கூறுமிடத்து, இந்நூல் ஒரு சிந்தனைக் களஞ்சியம். குறிப்பாக மாணவ உலகம் படித்துப் பயன் பெற வேண்டும்.

-பி.வி. கிரி

### கூனன் தோப்பு

ஆசிரியர்: தோப்பில் முகம்மது
மீரான்

வெளியீடு: ஜலீலா பப்ளிஷிங்
ஹவுஸ்
21 மேலரத வீதி
திருநெல்வேலி
டவுன் 627 006

பக்கம்:304 விலை ரூ.45

நூலாசிரியர் முதன்முதலாக எழுதியுள்ள நாவல் இது எனினும், இவரெழுதிய மற்ற நாவல்கள் முன்கூட்டியே வெளிவந்துவிட்டன. 'தலைச்சன் பிள்ளை' என்பதால் இதை தானே வெளியிட்டிருக்கிறார் தோப்பில் முகம்மது மீரான்.

எந்த இதழிலும் தொடர்கதையெல்லாம் எழுதாமலே, இவர் எழுத்துக்கள் பெரியதோர் வாசகர் வட்டத்தைப் பெற்றிருக்கின்றன. கதாசிரியர் தமிழைவிட மலையாளத்தில் தேர்ச்சிபெற்றவர் என்பது ஒன்று. கதைப் பாத்திரங்கள் மலையாள மணங்கமழும் மண்ணில் உலவுகிறவர்கள் என்பது மற்றொன்று. இந்த இரு காரணங்களால் புத்தகத்தில் முக்கால் பங்கு தமிழில் மலையாளத்தை எழுதியது போலிருக்கிறது.

'போன பஞ்சாயத்து ஓட்டுக்கு இந்த க்றா மத்திலெ பெறந்த பயலுவோ தறவாட்டுக்காரங்களுக்கு எதிராட்டு சொவப்புக்குத் தானே ஓட்டு செய்தானுவோ, அண்ணு நா கல்பிலெ நெய்யத்து செய்தேன்...' என்பது போல் எழுதப்பட்டுள்ளது. அந்தந்தப் பக்கத்தின் கீழே கடினச் சொற்களுக்கு வளக்கமும் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளது.

ஜாதிக் கலவரப் பூமியில் கதை நடக்கிறது. தத்ரூபமாகச் சம்பவங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. படித்து மகிழலாம்.

-இராசேந்திரன்




ஜெர்மன் நாட்டின் படன் உர்டெம்பெர்க் மாநில முதல்வர் டியபெல் மற்றும் தொழிலதிபர்கள், உயர் அதிகாரிகள் அடங்கிய ஜெர்மன் குழுவினர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர். அப்போது மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எம். சின்னசாமி, தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர் ஆகியோர் உடன் உள்ளனர். (20.2.95)

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் சீர்காழியில் நடைபெற்ற பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்; மற்றும் மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழாவில், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள், ஊனமுற்ற பெண் ஒருவருக்கு மூன்று சக்கரச் சைக்கிள் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஆர். பாஸ்கரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு கைவினைப் பொருட்கள் கழகத் தலைவரும், நிர்வாக இயக்குநருமான திரு ஓ.எஸ். மணியம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உடன் உள்ளனர் (19.2.95).



# படமும் செய்தியும்



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மாநில அளவில் நடைபெற்ற முன்னாள் முதல்வர் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 78-வது பிறந்த நாள் விழாவில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கு. லாரன்ஸ் அவர்கள், எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார். மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் உடன் உள்ளார். (27.1.95)



சிதம்பரனார் மாவட்டம் எட்டயபுரத்தில் மாநில அளவில் நடைபெற்ற மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழாவில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர்மீரான் அவர்கள் பாரதியாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் உடன் உள்ளார். (29.2.95)

# விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்தில்

# பல்துறைப் பணி விளக்க முகாம்

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில், அரசின் சாதனைகள், திட்டங்களை விளக்கும் வகையில் 22.2.95 முதல் 28.2.95 வரை பல்துறைப் பணி விளக்க முகாம் நடைபெற்றது. இம் முகாமில், மாவட்டந்தோறும் கிராம அளவில் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை மற்றும் தடுப்பு ஊசி, கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து, கால்நடைகளுக்கு மருத்துவம், இலவசக் கண் பரிசோதனை, போன்ற மருத்துவப் பணிகள் நடைபெற்றன.

முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதியான நபர்களைத் தேர்வு செய்தல், வங்கிக் கடன் உதவி பெற ஆலோசனை வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க மனுக்கள் பெறல், மகளிர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளல், ஏழைகளுக்கு இலவசமாக மரக்கன்று வழங்குதல், குடும்பநலம், சிறுசேமிப்பு குறித்து ஆலோசனை வழங்கல், உடல் ஊனமுற்றோர்க்கு உதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற பணிகளை மேற்கொண்டனர்.

ஊராட்சி ஒன்றியங்கள்தோறும் கவியரங்கம், கருத்தரங்கம், நாடகங்கள், வில்லுப்பாட்டு, வீடியோ படக்காட்சிகள் நடத்தப்பட்டன.

---

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், காமராசர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலில் பல்துறைப் பணி விளக்க முகாமினை, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தொடங்கிவைத்தார். மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு தே. ஜனார்த்தனன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. மு. ஆனந்தன், செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர்.



# தமிழுக்குப் பொற்காலம்!

**மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர்**
## திரு மு. தென்னவன் அவர்கள்

**வ**றுமையில் வாடினாலும், வாடுகையிலும், புகழ் பாடும்- தமிழ்ப் புகழ் பாடும் கை உங்களு டையது. தமிழ்நாடு காட்டும் கை உங்களுடையது. கைகளைக் குலுக் கிக் கொண்டே கையிலுள்ள ஆயுள் ரேகையை அழிக்க நினைக் கிற கைகள் எத்தனையோ இங்கே இருந்தாலும், எந்த நிலை வந் தாலும் இரட்டை நிலை எடுத்தா லும், இரட்டை இலை வெல்லும் என்பதை எடுத்துச் சொல்லுகின்ற கைகளாக இங்கே நீங்கள் அமர்ந்து இருக்கிறீர்கள். ஜெ. ஜெ. என்று ஜெயபேரிகை கொட்டு வதற்கு இங்கே காத்திருக்கிறீர்கள்.

**தலைவணங்காத் தமிழ் மொழி!**

முத்து மொழி, முடிமலை போல் மூத்த மொழி, முழு நிலவு சொத்து மொழி, மாங்கிளையில் தொங்குகின்ற கிள்ளை மொழி, தோகையினைத் திறந்தாடும் காட்சி மொழி, காற்றுடனே கதி ருடனே, ஒத்திருக்கும் அறிவு மொழி, ஆண்ட மொழி, ஆட்சி மொழி, ஒரு மொழிக்கும் தலை வணங்காத் தமிழ் மொழி என்று சொல்லுவார்கள்.


அதுமட்டுமல்ல, தொன்மை, முன்மை, எண்மை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை, மென்மை என்று நம்முடைய தமிழ் மொழிக்குச் சிறப்பு உண்டு.

அதுமட்டுமல்ல, எண்ணச் சிறந்தது தமிழ், எழுத்தில் சிறந்தது தமிழ், மண்ணிற் பழையதும் தமிழ், மாசற்று ஒளிர்வதும் தமிழ், பண்ணிற் சிறந்தது தமிழ், பாரி னில் பரந்தது தமிழ், கண்ணிற் சிறந்ததும் தமிழ், கண் இமை சான்றதும் தமிழ் என்று சொல்லு வார்கள்.

**மூத்த மொழி**

அதுமட்டுல்ல, இயற்கையோடு இயந்து என்றும் இயற்கையாக வாழ்கின்ற மொழி, இயற்கை அழகும், செயற்கை அழகும் ஒருங்கே கொண்ட மொழி, தோற்றத்தால் காலம் கணக்கிட முடியாத மொழியாக இருந்தாலும் தொன்மை வாய்ந்த மொழி. பழமைக்கும் பழமையாய், புது மைக்கும் புதுமையாய், விளங்கும் பொறுப்புள்ள மொழி, மூத்த மொழி என்றாலும், முழுமைக் கோலம் பூணாமல், கன்னிக் கோலம் பூண்ட மொழி, வல் லோசை, இசையோசை, மெல் லோசை, கொண்ட மொழி எழுத்தோசைகளைக் கூட்டினால் சொல்லோசைப் பிறக்கின்ற சிறப்பு மிக்க மொழி, அத்தகைய பெருமைக்குரிய மொழிக்கு இந்த நூற்றாண்டில் தொண்டாற்றிய கவிஞர்களைப் பற்றி இங்கே கவி பாடுவதற்குக் கவிஞர்கள் வந்திருக் கிறார்கள்.

**உலகத் தமிழ் மாநாடு– 2ஆம் நாள் நடந்த கவியரங்கிற்கு முன்னிலை வகித்து, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.**



**கவிதை அரங்கேற்றம்**

தமிழ் மொழியின் வேர்கள் பழமையானவை, ஆனால், அதன் பூக்கள் புத்தம் புதியவை. அந்தப் பூக்களைப் பூமாலையாக்கி பாமாலைசூட்ட வந்திருக் கிறார்கள். வார்த்தைகள் நடந்தால் வசனம்; அந்த வார்த்தைகள் நடன

மாடினால் கவிதை; அந்தக் கவிதையை அரங்கேற்றுவதற்கு இங்கே வந்திருக்கிறார்கள்.

இந்தக் கவி அரங்கத்திலே புதுமை உண்டு, புலமைப்பித்தன் வடிவிலே; இந்தக் கவியரங்கத் திலே பூந்தமிழ் உண்டு, பூங்குன்றன் வடிவிலே; காக்கைக் குருவி எங்கள் சாதி என்று சொன்ன குருவிக்கரம்பை உண்டு; இந்தக் கவியரங்கத்திலே பொன்மனத் தலைவியின் பொன்னடி போற்று கின்ற பொன்னடியான் உண்டு; இந்தக் கவியரங்கத்திலே பாண்டி நாடு முத்துடைத்து என்பார்களே, அந்தப் பாண்டி நாட்டு முத்து லிங்கம் உண்டு; தமிழகத்தின் ஜீவன்களைக் காக்கின்ற ஜீவ சக்தியாக விளங்குகின்ற புரட்சித் தலைவியை வாழ்த்துகின்ற ஜீவன் களைக் காக்கின்ற சிவனடி யான் இந்தக் கவியரங்கத்திலே உண்டு. உழைக்கும் திறன் நாள் என்று சொல்லக்கூடிய மே தினத்தைப் போற்றுகின்ற வகை யில் மேத்தா இங்கு உண்டு. இத் தன்னைக்கும் மேலாக கவியரங் கத்தின் தேரை ஓட்டுவதற்குத் தேரோட்டி கிருஷ்ணன், கு.ப. கிருஷ்ணன் இங்கு உண்டு; என் பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### புதுமைக் கவிஞன்

பட்டினிப் பற்கள் வயிற்றைக் கடித்தபோதும், பசி குடலையே சாப்பிடக் கூப்பிட்டபோதும், எட்டையபுரத்துக் கட்டையாய் கிடக்காமல், இந்தியத் தேசத்து நெருப்புப் பந்தமாய் நின்றவன் பாரதத்திலே, பா ரதத்திலே பார தீரம் பாடியவன்; அடையாத சுதந்திரம் ஆயிரம் இருந்தும், ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று போர்ப் பாட்டுப் பாடியவன். காலுக்குக் கீழே நின்று கவிஞர்கள் சிந்தித்த போது, தோளுக்கு மேலே நின்று அண்ட சராசரங்களையும் கவி யாலே அளந்து பார்த்த சிந்த னைக் கவிஞன், புதுமைக் கவிஞன், பாரதி - அவர் பற்றி இங்கே பாட இருக்கிறார்கள்.

### அந்த நாள்!

திருத்தத்திலே வெற்றி பெற் றான் ஒட்டக்கூத்தன்; தீர்ப்பளித்து வெற்றி பெற்றான் கரிகால் சோழன்; வருத்தத்திலே வெற்றி பெற்றான் இராமலிங்க வள்ளல்; விருத்தத்திலே வெற்றி பெற்றான் கம்பன்; நிதியளித்து வெற்றி பெற்றான் பாரி வள்ளல்; வாள் ஏந்தி வெற்றி பெற்றான் சேரலாதன்; பாவேந்தி வெற்றி பெற்றான் பாவேந்தர் பாரதி தாசன்.

காட்டாற்று வெள்ளத்தின் வேகம் கொண்ட கவிதைகளைத் தந்த தமிழே உனக்கு வணக்கம்,

## தனித்தமிழியக்கத் தோற்ற நிகழ்ச்சி

தனித்தமிழியக்கத் தோற்ற நிகழ்ச்சி குறித்து மறைமலையடிகள் மகள் நீலாம்பிகை அம்மையாரும், மகன் மறை. திருநாவுக்கரசும் தம் நூல்களில் எழுதியுள்ளனர்.

தனித்தமிழியக்கத் தோற்ற நிகழ்ச்சியின் போது உடனிருந்தவரான நீலாம்பிகை அம்மையார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"வடசொற்கலப்பால் தமிழ் தன் இனி மையும் தூய்மையும் இழந்தலை யான் முதன் முதல் அறிந்தது பின்வருமாறு. யான் பதின் மூன்றாண்டுடைய சிறுமியாயிருந்த போது ஒரு நாட் சாயங்காலம் என் தந்தையாரவர்களுடன் மிக மகிழ்வோடு எங்கள் தோட்டத்தில் உலாவிக் கொண்டு வருகையில் தந்தையார் தம்மை மறந்து இராமலிங்க அடிகள் அருளிச் சென்ற திருவருட்பாவிலுள்ள "பெற்றதாய் தனை மகமறந்தாலும்" என்னும் பாட்டைப் பாடி வந்தார்கள். அப்பாட்டின் இரண்டாவது அடியாக "உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்" என்பதனைச் சொன்னபோது, என் தந்தை யாரவர்கள் என்னை நோக்கி, "அம்மா இப்போது நான் பாடின பாட்டைத் தூய தமிழில் இராமலிங்க அடிகள் எவ்வளவு அழகாய்ப் பாடியிருக்கிறார்கள். ஆனால், அப்பாட்டின் இரண்டாம் அடியிலுள்ள 'தேகம்' என்ற சமஸ்கிருதச் சொல்லை நீக்கி, 'யாக்கை' என்னும் தனித்தமிழ்ச் சொல்லை அங்கே அமைத்துப் பாடியிருந்தால் இன்னும் எவ்வளவு நன்றாகயிருக்கும்! தமிழில் வட சொற்களைச் சேர்ப்பதால் தமிழ் தன் இனிமை இழந்துபோவதோடு, பல தமிழ்ச் சொற்களும் வழக்கில் இல்லாமல் இறந்து போகின்றன" என்றார்கள். இது கேட்ட நாள்முதல் என் தந்தையாரும் நானும் தனித் தமிழிலேயே பேசுவதற்கும் எழுதுவதற்கும் உறுதிகொண்டோம்.

**—ஆதாரம் 'தனித்தமிழியக்கம்'— முனைவர் கு.திருமாறன்.**

தமிழின் புகழ் இந்த உலகில் மணக்கும் என்று சொன்ன பாவேந்தரைப் பற்றி இங்கே பாட இருக்கிறார்கள். அதே பாவேந்தன் அன்றைக்குச் சொன்னான், கண் களும் ஒளியும் போல, கவின்மலர் வாசம் போல, பெண்களும், ஆண்களும் சரிநிகர் சமானத்தார் ஆனார் என்ற பண் வந்து காதில் பாயும் நாள் எந்த நாளோ என்று கேட்டான். அந்த நாள் இன்றைக் குப் புரட்சித்தலைவி ஆட்சிக்கு வந்த நாள். அத்தகைய பாவேந் தரைப் பற்றி இங்கே பாட இருக் கிறார்கள்.

### பாட்டுக் கோட்டை

அதைப்போலவே, உள்ளத்து உள்ளது கவிதை, இன்பம் உரு வெடுப்பது கவிதை; தெள்ளந் தெளிந்த தமிழில் உண்மை தெளிந் துரைப்பது கவிதை என்றார் கவிமணி; கவிமணியைப் பற்றி இங்கே பாட இருக்கிறார்கள். பார தத்தில் நம் மக்கள், பண்பினில் நம் மக்கள், என்று பாடிய நாமக்கல் கவிஞனைப் பற்றி தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா, தமிழன் என்பதை மறக்காதே, தாய் மொழி பெரு மையைத் துறக்காதே, என்று பாடிய நாமக்கல் கவிஞனைப் பற்றி இங்கே பாட இருக் கிறார்கள். சமுதாயத்தைக் காப்ப தற்காக, பாட்டுக் கோட்டையைக் கட்டிய பட்டுக்கோட்டையைப் பற்றி இங்கே பாட இருக் கிறார்கள்.

### பொற்பதமும் சொற்பதமும்

சிறுகுடலாய், சிறுகூடல் பட்டியில் பிறந்த செட்டி நாட்டுக் கவிஞன், பொற்பதமும், சொற் பதமும் நிறைந்த கவிஞன்.



## எல்லாம் தமிழிலே!

இயன்றவரை தமிழே பேசுவேன், தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன். எப்போதும் பராசக்தி - முழு உலகின் முதற் பொருள் - அதனையே தியா னஞ் செய்து கொண்டிருக்க முயல்வேன். அத னைக் குறித்தே ஓயாமல் எழுதிக் கொண்டி ருக்க முயல்வேன்.

வாழ்த்துப்பா இசைத்தபோதும், வசவுப்பா உதிர்த்தபோதும், வளமான கவிதையின் வடிவத் தைச் சிதைக்காது தந்த கவிமகன். வண்ணத் தமிழ் மகளை வாழ வைப்பதற்கு எண்ணச் சிறகடித்து, எண்ணற்ற கவிதைகளை வண்ண முறத் தந்த கண்ணதாசன். காலம் எனும் மாளிகையிலும், காற்று மழை ஊழியினும், கனல் நெருப்பினும் அழிக்க முடியாத கவிதைகளைத் தந்தவன் தான் கண்ணதாசன். அந்தக் கண்ண தாசனைப் பற்றியும் இங்கே பாட இருக்கிறார்கள்.

இன்றைக்குத் தஞ்சையிலே தமிழுக்கு வசந்த விழா நம் தலைமுறையே காணாத அறிஞர் விழா தமிழ் அன்னை பூணுகிறாள் புதுக் கோலம், தமிழ் அறிந்தோர் நெஞ்ச மெலாம் ஊர்கோலம்!

### பொற்காலம்

தஞ்சையிலே தமிழுக்குப் பொற்கால உதயம், தரணி எல்லாம் துள்ளட்டும் தமிழ் அறிந்தோர் இதயம். காவிரி ஓடும் தஞ்சையிலே கன்னித் தமிழ் ஆறு ஓடும், அது காவியத் தலைவியாம் புரட்சித் தலைவியின் புகழ் பாடும். நஞ்சை கொஞ்சும் தஞ்சை யிலே நற்றமிழ்க்கோர் மாநாடு. நானிலம் போற்றும் புரட்சித் தலைவியின் புகழுக்கோர் அது ஒரு ஏடு தமிழுக்குப் பொற்காலம் தஞ்சை மண்ணில் புரட்சித் தலைவியின் புகழாரம் எதி ரொலிக்கும் விண்ணில் தஞ்சை யிலே வீதி எங்கும் தமிழ் ஆறு பாயட்டும்; விண் எங்கும் தலைவி புகழ் பாடட்டும் பூந்தமிழை வாழ்த்துவதற்குப் புத்தாண்டு பிறந்தது; புகழ் வாசற் கதவு தஞ்சையிலே திறந்தது, புரட்சித் தலைவி வடிவத்திலே!

இந்த நூற்றாண்டுக் கவிஞர் களைப் பற்றிப் பாட வந்திருக்கிற இந்த நூற்றாண்டுக் கவிஞர்களே! ஒவ்வொரு நூற்றாண்டிலும் தமிழ் வளர்ந்தது. ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்னால் தொல் காப்பியம் தோன்றியது; அதற்குப் பிறகு சங்க இலக்கியம் மலர்ந்தது; இரண்டாம் நூற்றாண்டிலே சிலப் பதிகாரம், மணிமேகலை; மூன் றாம் நூற்றாண்டிலே திருவாசகம்; நான்காம் - ஐந்தாம் நூற்றாண் டிலே நெடுங்கதை; ஆறாம் நூற் றாண்டிலே கல்லாடம்; ஏழாம் நூற்றாண் டிலே அப்பர், சுந்தரர்,

# சங்கப் பலகை

புலவர்கள் ஆராய்ந்தார்களென்றதனால், இடையிடையே ஏற்பட்ட கலகத்தாலும் பிற வற்றாலும் நூல்கள் சிதைந்தனவென்றும், ஆராயும்வண்ணம், அரசர்கள் செய்வித்தார் களென்றும், செய்யுட்களைத் தொகுப்பித்தார் களென்றும் தெரிகின்றன.

இவர்கள் பெருமையை உணர்ந்த பிறர், தாமும் அவர்களைப் போல் மேம்பட்டு விளங்க வெண்ணித் தாம் பாடிய பாடல் களைக் கொணர்ந்து, அவற்றைப் பார்க்க வேண்டுமென்றும், அவற்றை அங்கீகரிக்க வேண்டுமென்றும், தம்மைச்சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் முயல்வராயினர். பிறர் தீமையைச் சொல்லா நலத்தவர் களாதலின், அவர்களுடைய கல்விக்குறை யையும் அவர்கள் செய்யுட்களிலுள்ள வழுக்களையும் எடுத்துக்கூற இயலாதவர் களாகி வருந்தி அந்தத் துன்பத்திலிருந்து தம்மை விடுவிக்க வேண்டுமென்று சங்கப் புலவர்கள் சோமசுந்தரக் கடவுளை வேண்டினர். இவர்களுடைய வேண்டு கோளின்படியே தெய்வத்தன்மை வாய்ந்த ஒரு பலகையை இவர்களுக்குத் தந்தருளி எவருக்கு அது இடங்கொடுக்குமோ அவ ரைச் சிறந்த புலவரென்று கண்டுகொள்ளும் படி அவர் கட்டளையிட்டருளினர். அப்பலகை யின் பேருதவியால் குறைந்த கல்வியுடைய வர்களாலேற்பட்டு வந்த துன்பம் இவர்கட்கு அடியோடே நீங்கியது.

"மொழியறி சங்கப்பலகை",
"பாலறி ஞானப்பலகை"

(வே.திருவிளையாடல்)

என்று பெரியோர் பாராட்டியிருப்பதால், சங்கப் பலகை இருந்ததும் அதனுடைய இயல்பும் விளங்குகின்றன.

"முழுதுணர்ந்தருள் மலயநன்முனி
மொழியு முத்தமி ழும்பழுதுறும்படி புலவ
ரேறிய பலகையொன்றுடையான்"

என்று வில்லிபுத்தூராரும் பாடியிருக் கிறார்.

—'சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்' என்னும் நூலில் டாக்டர் உ.வே. சாமி நாதையர்.

பாசுரங்கள்; 10-ஆம் நூற்றாண் டிலே சீவக சிந்தாமணி; 11-ஆம் நூற்றாண்டிலே பெரியபுராணம், 12-ஆம் நூற்றாண்டிலே கந்த புராணம்; 13-ஆம் நூற்றாண்டிலே சிவஞானபோதம்; 14-ஆம் நூற் றாண்டிலே ஸ்தல புராணங்கள்; 15-ஆம் நூற்றாண்டிலே திருப் புகழ், வில்லி பாரதம்; 16-ஆம் நூற்றாண்டிலே திருவிளையாடல் புராணம் 17-ஆம் நூற்றாண்டிலே சீராப்புராணம்; 18-ஆம் நூற் றாண்டிலே தாயுமானவர்கள் பாடல்கள்; 19-ஆம் நூற்றாண் டிலே இராம லிங்கர் பாடல்கள்; 20-ஆம் நூற்றாண்டிலே பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கண்ணதாசன், தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், பட்டுக் கோட்டைக் கல்யாண சுந்தரம் பாடல்கள், அந்த நூற் றாண்டுக் கவிஞர்களைப் பற்றிப் பாடுவதற்கு 21-ஆம் நூற் றாண்டை நோக்கி அழைத்துச் செல்லுகின்ற புரட்சித் தலைவி யின் சார்பிலே வருகை தந்திருக் கிற கவிஞர்களே! உங்களை வரவேற்று விடைபெறுகிறேன்.

# மாணவர் பக்கம்

## தெரிந்துகொள்ளுங்கள்:

## அந்தமான் தீவுகள்

அந்தமான் தீவுகள் இந்தியாவிற்குச் சொந்தமானவை. வங்காள விரிகுடாவில் உள்ளன. சென்னையிலிருந்து 740 மைல் தொலைவில் இருக்கின்றன. தெற்கு வடக்காக இவற்றில் மொத்தம் 204 தீவுகள் உள்ளன. இவற்றின் நீளம் 219 மைல்.

பெரிய தீவுகள், சிறிய தீவுகள் என இந்தத் தீவுக் கூட்டம் இரண்டு பகுதிகளாக உள்ளன. இங்கு மலைகளும் காடுகளுமே அதிகம். தேக்கும் தென்னையும் வேறு பல மரங்களும் செழிப்பாக வளர்கின்றன. பெரிய விலங்குகள் ஏதும் இந்தக் காடுகளில் இல்லை. எலி, வௌவால் ஆகியவை அதிகமாக உள்ளன. இந்தத் தீவில் ஆதியிலிருந்து வாழ்ந்து வரும் மக்கள் மிகப் பழங்கால இனத்தைச் சேர்ந்தவர்கள். குள்ளர்கள். இவர்கள் இனம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது.

ஆங்கிலேயரின் ஆட்சியின்போது குற்றவாளிகளை நாடு கடத்திக் குடியேற்றும் இடமாக அந்தமான் தீவுகள் இருந்து வந்தன. இன்று இந்தியர் பலர் இங்குச் சென்று விவசாயம், மரம் வெட்டுதல் முதலிய தொழில்களைச் செய்து வருகிறார்கள். போர்ட்பிளேர், கார்ன்வாலிஸ், எல்பின்ஸ்டன் என்பவை முக்கியத் துறைமுகங்கள். இந்தத் தீவுகளின் தலைநகரம் போர்ட்பிளேர் ஆகும். இங்குள்ள மிக உயரமான இடத்தின் பெயர் சாடில். அதன் உயரம் 2,400 அடி.

—நன்றி: குழந்தைகள் கலைக்களஞ்சியம் தொகுதி 1



## இதுதான் வழி!

—தி.ப. சீத்தாராமன்

சின்னத் தம்பி ஓடிவா!
சிறப்பாய் நீயும் வாழ்ந்திட
சின்ன வழிகள் சொல்கிறேன்,
சிரித்து நீயும் ஏற்றிடு!

பள்ளிக் கூடம் சென்றிடு
பாடம் நன்றாய்ப் படித்திடு
துள்ளி நீயும் ஓடியே,
துடிப்பாய் என்றும் வாழ்ந்திடு!

பொய்மை தன்னை விரட்டிடு
புத்தர் காந்தி யேசுவழி
மெய்மை வாழ்வை நடத்திடு
மேகம் போல வாழ்ந்திடு!


தந்தை தாயை வணங்கிடு
தமிழை என்றும் போற்றிடு
இந்த உலகை வெல்லவே
இதுதான் வழிகள் புரிந்திடு!

## அறிவுச் சுடர்

கற்றவர்க்கே உரிய பேறு...

☆ நமக்கு முன் வாழ்ந்த பெரியோர்கள் வாழ்வை நாம் அறிதல் வேண்டும். அவர்கள் வாழ்வு நமக்கு வழிகாட்டியாகும். அவர்களைக் காண்பதும், கேட்பதும், அவர்களோடு பழகுவதும் இப்போது கூடுமோ? ஒரு வகையில் கூடும். அவர்கள் நூல்களின் வடிவாக விளங்குகிறார்கள். அந்நூல்களைக் கற்றலும் கேட்டலும் வேண்டும். அப்போது எவர்க்கு உண்டு? கற்றவர்க்கே உண்டு மற்றவர்க்கு இல்லை.

—டாக்டர் மு.வ.






தாரகை ஒன்று
தரையிலே பிறந்தது
தாயகம் அதனால்
தன்புகழ் சிறந்தது


தெற்குத் திசையில்
துருவமீன் தோன்றிற்று!
தென்னகம் நோக்கித்
திசையேழும் போற்றின!!

காற்று வெளியெலாம்
கவிதை மணந்தது!
ககனப் பரப்பெலாம்
ஒளிமய மானது!!

பூக்கும் மலரெலாம்
புன்னகை புரிந்தன!
புரட்சித் தலைவியின்
புகழினைப் பேசின!!

காலைப் பறவைகள்
கானம் இசைத்தன!
கலையுலக அரசிக்கு
வாழ்த்துகள் படித்தன!!



சிற்றோடை வாயெலாம்
செந்தமிழ்ப் பாடல்!
சித்திர மயிலுக்கும்
இப்போது ஆடல்!!

காவிரிச் செல்விக்குக்
கங்கையின் வாழ்த்து!
கருணை முதல்வர்க்குக்
கவிவாணர் பாராட்டு!

புரட்சித் தலைவிக்குப்
பிறந்தநாள் இன்று!
புதுமைகள் தம்விழி
திறந்தநாள் இன்று!

இன்றுதான் தமிழகம்
புதிதாய்ப் பிறந்தது!
இன்றுதான் எமக்கெலாம்
புதுயுகம் பிறந்தது!

இணையிலா முதல்வர்
இன்றுபோல் வாழ்க
எண்திசைத் தமிழர்க்கும்
இன்பமே சூழ்க!



# அறிவியல் தமிழ் வளர்ப்போம்!

## திரு ஏ.கே.ஏ. அப்துல்சமது அவர்கள்

### பொதுச் செயலாளர்: இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

*1995*-இல் கால் எடுத்து வைக்கும்போதே, ஒரு நல்ல தொடக்கம் நிகழ்ந்திருக்கிறது. இன்று நெற் களஞ்சியம் நிமிர்ந்து நிற்கிறது. உங்களுக்குத் தெரியும், நெல்லினுடைய பான்மை. கதிர் முற்றி, அதிலே நெல் பழுக்க, பழுக்கப் பால் ஏற, ஏற, அந்தக் கதிர் தலை சாயும். அதைத்தான் 'செந்நெல் வடியும்' இந்த பூமியிலே நாம் செல்லும் இடங்களிலே எல்லாம் பார்க்கிறோம். "கதிர் முற்றி தாள் சாயக்கண்டு மனம் களித்திடுவார் தமிழர்" என்று ஒரு பாட்டு உண்டு. ஆனால், இன்று ஒரு புதுமையைப் பார்க்கிறோம். நெற் களஞ்சியம் இன்று நிமிர்ந்து நிற்கிறது. உலகளாவிய தமிழர்களை, தமிழ் அறிஞர்களைத் தன்னகத்தே நிரம்பப் பெற்றிருக்கக்கூடிய காரணத்தாலே, தஞ்சைத் தரணியில், இன்று இந்த மண்ணுக்கே தக்க பெருமிதத்தோடு, இன்று செருக்கோடு நிமிர்ந்து நிற்கிறது. ஏனெனில், இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நோக்கம் என்ன? இதன்முன் நின்று, திட்டமிட்டு, ஊக்குவித்து, மிகச் சிறப்பாக இதனை நடத்தக்கூடிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இந்த மாநாட்டினுடைய நோக்கத்தைச் சுருக்கமாகச் சொன்னார். *21*-வது நூற்றாண்டில் தமிழர்கள் கால் பதிக்கும்போது ஒரு நம்பிக்கையோடு பதிக்க வேண்டும் என்று. அதுதான் இந்த மாநாட்டினுடைய நோக்கம் என்று சொன்னார். அந்த நம்பிக்கையை இந்த மாநாடு நிரம்பத் தந்திருக்கிறது என்ற மனநிறைவு நமக்கு ஏற்படுகிறது. இந்த மாநாடு நடப்பதிலே நமக்கெல்லாம் ஒரு பெரிய மன நிறைவு. யார் எல்லாம் வருவார்கள். யார் எல்லாம் வர மாட்டார்கள் என்பதைப் பற்றியே ஒரு ஆய்வு- தமிழ் ஆராய்ச்சிக்கு மேற்பட்ட ஒரு ஆய்வு- இந்த நாட்டிலே நடந்தது. ஆனால், துவக்கத் திருவிழா மிகச் சிறப்பாக நடந்தது.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு எட்டு திசைகளிலிருந்தும் தமிழர்கள் வந்து குவிந்திருக்கிறார்கள். வந்து, உரையாற்றத் தகுதி பெற்ற நம்முடைய இந்தியக் குடியரசினுடைய துணை ஜனாதிபதி வந்து மிகச் சிறப்பாகப் பேசினார். அவர் ஒன்று சொன்னார். அந்தக் கருத்து எனக்கு மிக ஆழமாகப்பட்டது. உலகத்தினுடைய பல்வேறு நாடுகளுக்குச் செல்லும்போது, அங்கே, அந்தந்த நாடுகளினுடைய பண்பாட்டிலே இருக்கக்கூடிய தாக்கங்களைப் பார்க்கும்போது, அவையெல்லாம் இந்திய நாட்டினுடைய தாக்கம் என்று பொதுவாகச் சொல்லுகிறார்கள். ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், உலகத்திலே இருக்கக்கூடிய நாடுகளின் பண்பாட்டிலே இருக்கக்கூடிய தாக்கத்துக்குக் காரணமானது இந்திய நாட்டினுடைய பண்பாடு என்று சொல்வதை விட, சரியாகச் சொல்வதானால்,அது தமிழ்ப் பண்பாடாகத்தான் இருக்க வேண்டுமென்று நம்முடைய துணை ஜனாதிபதி

**உலகத் தமிழ் மாநாட்டில், வாழ்த்தரங்கில் (2.1.95) கலந்து கொண்டு ஆற்றிய உரையிலிருந்து.**

அவர்கள் சொன்ன கருத்தை, இந்த மாநாட்டுக்குக் கிடைத்த ஒரு மிகப் பெரிய நல்ல கருத்தாக நான் ஏற்றுக்கொள்கிறேன்.

நேற்று நம்முடைய முதல மைச்சர் அவர்கள் ஒரு பிர கடனத்தைச் செய்தார். இதுவரை முத்தமிழை வளர்த்தோம். இயல், இசை, நாடகம் என்று வளர்த் தோம். இனி ஒரு புதிய அறிவியல் தமிழினை வளர்ப்போம். அதை நம்முடைய குறிக்கோளாகக் கொள்வோம் என்று சொன்னார். இப்படிச் சொல்லும்போது சில ருக்கு ஒரு ஐயப்பாடு எழக்கூடும். இதுவரையிலே இருக்கக்கூடிய இயற்றமிழ், நாடகத் தமிழ், இசைத் தமிழ் அறிவியலை வளர்க்க வில்லையா என்றால் வளர்த்திருக் கிறது. இப்போது நம்முடைய குறிக்கோள், இந்த முத்தமிழைக் கொண்டு அறிவியல் தமிழை இன்னும் வளர்க்க வேண்டுமென் பதுதான் இந்த மாநாட்டினுடைய குறிக்கோள் என்று அவர் சொன் னதை நான் மிகச் சிறப்பாகக் கருதுகிறேன். அதற்கு இங்கே வந்திருக்கக்கூடிய பெருமக்கள் எல்லாம் மிகப் பெரிய அளவிலே தங்களுடைய பங்கை அளிப் பார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஒன்று, என்னுடைய உள்ளத் திலே நீண்ட நாட்களாக இருக்கக் கூடிய கருத்து. அதைச் சொல் வதற்கு இந்தப் பேரவைதான் மிகப் பொருத்தமென்று கருது கிறேன். நம்முடைய இந்திய நாட் டினுடைய முன்னாள் ஜனாதிபதி, நம்முடைய மதிப்புக்கும் மரியா தைக்கும் என்றும் விளங்கக்கூடி யவர்களாக உள்ள ஆர்.வி. அவர்கள் பேசும் போது ஒன்று சொன்னார்கள். "ஆதிசிவன் பெற்ற தமிழ்" என்று சொன் னார்கள். உண்மைதான். சரித்திர பூர்வமாகப் பார்க்கும்போதுகூட அவர் சொன்னது, இறைவன் இந்த உலகத்தில் எத்தனையோ மொழிகளை ஆக்கி இருக்கிறான். அப்படி ஆக்கப்பட்டு, இன்று வழங்கப்பட்டு, இன்று உருவாகி இருக்கக்கூடிய மொழிகளுக்கெல் லாம் ஊக்க மொழியாக, முதன் மொழியாகத் தமிழ் இருக்கிறது என்ற கருத்திலே அவர் சொன் னார். இதை நான் ஏற்றுக்கொள் கிறேன்.

நம்முடைய திருக்குறளிலேகூட "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்ற குறளைச் சொல்லுகின்றோம். ஆக, ஆதி பகவனை முதலாகக் கொண்டது இந்த உலகம். உல கத்திலே இன்று பரவி, நிரவி இருக்கக்கூடிய முப்பெரும் சமயங்கள்- இந்து சமயம், கிறித் துவ சமயம், இஸ்லாமிய சமயம்




ஆகியவை உலகத்திலே ஆதி பகவன்- அவருடைய பெயர் "ஆதாம்" என்று ஏற்றுக்கொண்டி ருக்கின்றன. இந்த 'ஆதி பகவன்' என்ற சொல்லைக் கேட்கும் போதெல்லாம், அந்த 'ஆதாம்' என்ற பெயரைத்தான் வள்ளுவர் 'ஆதி' என்று சொன்னாரோ என்ற ஒரு எண்ணம் எனக்கு ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. இது தமிழ் ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து செய்ய வேண்டிய ஒரு ஆராய்ச்சி. இந்த மேடையிலே அதற்கு ஒரு தொடக்கமாகத்தான் நான் நிகழ்த்தி இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன். தமி ழுக்கே உள்ள பெருமை, தமிழ ருக்கு உள்ள பெருமை என்ன என்று நான் பல காலம் சிந்தித்துப் பார்க்கும்போது ஒரு சொற் றொடர் நமக்கு இந்தப் பெருமை யைத் தருகிறது. தமிழர்களுடைய வாழ்வைச் சுட்டிக் காட்டுகிறது.

2000 ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்த மக்கள், பண்பாடுடைய மக்கள் கலாச்சார சிறப்பு மிக்க மக்கள், இலக்கியம் படைத்த மக்கள், இலக்கணம் படைத்த மக்கள் என்று சொல்லும்போது அந்தப் பெருமை இந்த உல கத்திலே இன்று வாழக்கூடிய விடுதலை பெற்றுள்ள நாடுகள் என்ற அணியிலே இடம் பெற்றி ருக்கக்கூடிய 172 நாடுகளுக்கும் கிடைப்பதில்லை. அந்தச் சமு தாயங்களுக்குக் கிடைப்பதில்லை. சொல்லப் போனால், இந்தப் பெருமை 6 சமுதாய மக்களுக்குத் தான் இருக்கிறது. நான் சொல்லு வது 2000 ஆண்டுகளுக்கு முந்தை யது என்று சொல்லப்படக்கூடிய சொற்றொடருக்குள்ள சரித்தி ரத்தை உள்ளடக்கிய பெருமை. அப்படி யாரெல்லாம் இருந்திருக்

கிறார்கள் என்று நினைத்துப் பார்க்கிறேன். நம்முடைய கிழக்கிலே சீனர்கள் இருந்திருக்கிறார்கள். அடுத்து கிரேக்கர்கள் இருந்திருக்கிறார்கள். அதற்கு மேற்கே ரோமானியர்கள் இருந்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டுக்கு அண்டையிலே அரபுக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். கங்கைச் சமவெளியிலே ஆரியர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். நமக்குத் தெரிந்த வகையிலே தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

2000 ஆண்டு களுக்கு முன்னே என்று சொல்லக் கூடிய- சீனர்கள் தங்களைச் சீனர்களாக மதித்தார்கள். சீனர்கள் அல்லாத மற்ற மக்களை- மன்னிக்க வேண்டும் பிசாசுகள் என்று சொன்னார்கள். 'டெவில்ஸ்' என்று சொன்னார்கள். இன்னும் ஒன்று, நமக்கு மேற்கே உள்ள கிரேக்கர்கள் தங்களுடைய நாட்டு மக்களைச் 'சிட்டிசன்ஸ்'— குடி மக்கள் என்று சொன்னார்கள். மற்றவர்களை 'ஏலியன்'- அன்னியர்கள் என்ற இடத்தில் வைத்தார்கள். அதற்கு மேற்கே இருந்த ரோமர்கள்- தங்களை 'ரோமர்கள்', 'ரோமன்ஸ்' என்று பெருமிதத்தோடு சொன்ன அதே நேரத்தில், மற்றவர்களை 'ஸ்லேவ்ஸ்'— 'அடிமைகள்' என்று தான் குறிப்பிட்டு வாழ்ந்தார்கள். அரபுக்களோ தங்களை அரபிகள்— பேசத் தெரிந்தவர்கள் என்று பெருமிதத்தோடு சொன்ன அதே நேரத்தில், அரபிகள் அல்லாதவர்களையெல்லாம் பேசத் தெரியாத ஊமையர்கள் என்று சொன்னார்கள். கங்கைச் சமவெளியிலே வாழ்ந்தவர்களோ 'ஆரியர்கள்' என்று தங்களைக் குறிப்பிட்டார்கள். மற்றவர்களை 'மிலேச்சர்கள்' என்று இழித்துரைத்தார்கள். ஆனால், அதே 2000 ஆண்டுகளுக்கு முன்னாலே, நாம் கால் பதித்து நடமாடிக் கொண்டிருக்கக்கூடிய இந்த மண்ணிலே நடமாடிய தமிழர்கள் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று சொன்னார்கள். இந்த ஒரு சொற்றொடரைத் தமிழ் மொழியிலே இருக்கக்கூடிய அத்தனை இலக்கியங்களிலும் மிகச் சிறந்த சொற்றொடராக நான் கருதுகிறேன். ஏனென்றால், நம்முடைய இலக்கியத்தினுடைய பெருமை மாத்திரமல்ல, பண்பாட்டினுடைய சிறப்பையும் அது காட்டுகிறது. இன்று இருக்கக்கூடிய உலகத்திலே வாழக்கூடிய மக்கள் எல்லாம் மனிதர்கள்தான், சமமானவர்கள், உறுதி பெற்றவர்கள் என்று சொல்லுவது எளிது. 2000 ஆண்டுகளுக்கு முன்னே தன்னை ஒத்த மனிதர்கள் அல்லாதவர்களைப் பிசாசுகள் என்று குறிப்பிட்டு தன்னை ஒத்த மனிதர்கள் அல்லாதவர்களை எல்லாம் அன்னியர்கள் என்று குறிப்பிட்டு, தன்னை ஒத்த மனிதர்கள் அல்லாதவர்களை எல்லாம் மிலேச்சர்கள் என்று குறிப்பிட்டு, வாழ்ந்த அந்தக் காலகட்டத்தில் தமிழன் தான் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று சொல்லி வாழ்ந்தான்.

அப்படிப்பட்ட பெருமைக்குரிய தமிழுக்கு இன்னொரு சிறப்புண்டு. எத்தனையோ தனி மொழிகள் இலக்கியச் செறிவுள்ள மொழிகள் இருக்கின்றன. ஆனால், பல மொழிகளை எடுத்துக்கொண்டால் ஒரு சமய வழிபட்ட இலக்கியங்களைத்தான் அந்த மொழிகளிலே காண முடியும். ஆனால், உலகத்திலே இன்று சிறப்போடு சொல்லக்கூடிய புத்த மதம், சமண மதம், சைவ மதம், இஸ்லாமியம், கிறித்துவம் ஆகிய இந்த ஐந்து பெரும் சமயங்களுடைய இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கக்கூடிய ஒரே தனி மொழி தமிழ் மொழியாகத்தான் இருக்கிறது.

ஆகவேதான் தமிழுக்கு விழா எடுக்கிறோம் என்று சொன்னால் அந்தத் தமிழ் மக்கள் எல்லாம் வருகிறார்கள். சமய வேறுபாட்டினைக் கடந்து, தாங்கள் வாழக்கூடிய எல்லைப் பரப்பினைக் கடந்து வந்திருக்கிறார்கள்.

300 ஆண்டுகளுக்கு முன்னாலே எங்களுடைய முன்னோர்கள் பாய்மரக் கப்பலில்- மரக் கலத்தில் ஏறி, மொரீசியஸில் தரை தட்டி, காடுகளை எல்லாம் அங்கே மேடாக்கி, சமப்படுத்தி, நாடாக்கி, அதைப் புதுப்பித்து, உழைத்து, நாங்கள் உயிர் பெற்று வாழ்கிறோம் அதற்கு எடுத்துக் காட்டாக எங்களுடைய முன்னோர்கள் சென்ற கப்பலின் வடிவத்தைத் தமிழக முதலமைச்சருக்கு நான் பரிசாகத் தருகிறேன் என்று சொன்னார். ஆக, தமிழகத்திலிருந்து 2000 ஆண்டுகளுக்கு

## ஊசிமுறி

**இடைக்காடனார் பாடிய 'ஊசிமுறி' என்னும் ஒரு நூல் இருந்ததாகத் தெரியவருகிறது. அதிலிருந்து சில பாடல்கள் மட்டும் நூற்பெயருடன் பழைய உரைகளிற் காணப்படுகின்றன. ஊசிமுறி என்னும் பெயர், எழுதுங் காலத்தில் எழுத்தாணியாலெழுத முடியாத ஓசையையுடைய செய்யுட்களையுடைமையாற் பெற்ற காரணப் பெயர். இதைப்போன்ற நூல்கள் வேறு வகையாகப் பல உள்ளன.**

முன்னாலே கப்பல் புறப்பட்டது. இராஜராஜ சோழன் காலத்திலே புறப்பட்ட கப்பல் மலேஷியா போய், கடாரத்தை வென்றது. ஆனால், இன்று சரித்திரம் திரும்பிக் கொண்டிருக்கிறது. கடாரத்திலே இருந்து சாமிவேலு வந்திருக்கிறார். மொரீசியஸிலிருந்து நம்முடைய அமைச்சர் வந்திருக்கிறார். தமிழ் இனம் மீண்டும் வாழத் தொடங்கிவிட்டது. ஆகவே வாழ்விழந்து சென்றவர்கள் எல்லாம் மீண்டும் தமிழை வாழ்த்த, தமிழகத்தை வாழ்விக்க வந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு தொடக்கம் இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினுடைய தொடக்கமாக அமைந்திருப்பது பற்றி நான் மகிழ்கிறேன்.

நான் ஏதோ வாழ்த்துரை என்றால், 4 வார்த்தைகள் வாழ்த்திச் சொல்லலாம் என்று நினைத்தால், நம்முடைய முன்னாள் ஜனாதிபதி ஒரு தீசிசையே வாழ்த்தாகச் சொன்ன பிறகுதான், நாம் கொஞ்சம் தவறு செய்துவிட்டோம், நாமும் தீசிஸ் கொண்டுவந்திருக்கலாமே என்ற எண்ணம் ஏற்பட்டது.

ஆனால், உண்மை என்ன வென்றால், இன்று வாழ்த்துரை வழங்கி இருக்கக்கூடிய இந்த அரங்கம், நேற்று நடத்திய தொடக்க விழா, 5-ஆம் தேதி நடக்கக்கூடிய நிறைவு விழா இந்த விழாக்கள் எல்லாம் ஏன்? உண்மையான தமிழ் ஆராய்ச்சி, தமிழ் வளர்ச்சிக்கான ஆய்வுகள், கருத்துரைகள், உரையாடல்கள், உறவாடல்கள் எங்கே நடக்கின்றன என்றால், தமிழ்ப் பல்கலைக் கழகத்தினுடைய வளாகத்திலே இருக்கக்கூடிய அறைகளிலே நடக்கின்றன. தமிழுக்குத் தலைமை தாங்குவதற்காக ஜப்பானிய அறிஞர் வந்து உரையாற்றுகிறார் என்று சொன்னால், இன்று 42 நாடுகளிலிருந்து இங்கு வந்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் அமைதியோடு, ஆழமாக நான் திருக்கிறார்கள் என்றால், அவர்கள் அமைதியோடு, ஆழமாக நான் ஜப்பானியத் தலைவரோடு தொடர்பு கொண்டபோது, அவர் சொன்னார், 30 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆசிய நாடுகளுடைய சரித்திரத்தை ஆய வேண்டுமென்று நான் முற்பட்டபோது, எந்த நாட்டினுடைய சரித்திரத்தையும் ஆழமாக, அகலமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் தமிழைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று தெரிந்தபோதுதான் நான் தமிழ் கற்க ஆரம்பித்தேன். 30 ஆண்டுகளாகத் தமிழைக் கற்றுக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னார். 3 ஆண்டுகள்கூட தமிழை முறையாகப் பயிலாதவர்கள் தங்களுக்குத்தான் மொத்தமாகச் சொந்தம் என்றும், அதோடு முடிந்துவிட்டது என்று எண்ணிக் கொண்டிருக்கிறவர்களுக்கு இன்று வந்திருக்கக்கூடிய ஜப்பானிய தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தினுடைய தலைவராக விளங்கக்கூடிய அவருடைய வாழ்க்கை எடுத்துக்காட்டாக இருக்கிறது.

ஆகவே, அப்படிப்பட்ட அறிஞர்கள் நள்ளிரவிலே கண் விழித்து, அவர்கள் தங்கள் வாழ்க்கையையே மெழுகுத் திரியாக்கி, தமிழை வளர்ப்பதற்காக தங்களை அழித்துக்கொண்டு, அவர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய அந்த மூதறிஞர்களுக்கு, அந்தப் பேரறிஞர்களுக்கு, அந்தத் தமிழ் அறிஞர்களுக்கு மொத்தத் தமிழ் இனமே கடமைப்பட்டிருக்கிறது. அவர்களை மனமார வரவேற்கிறோம், அவர்களை வாழ்த்துகிறோம் என்று எடுத்துக்காட்டுமா போலத்தான் இந்தத் தமிழ் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது எந்தவிதத்திலே நடக்க வேண்டுமோ, எவ்வளவு சிறப்புச சேர்க்க வேண்டுமோ அப்படிச் சிறப்புச் சேர்ப்பதற்காகத் தமிழகத்தினுடைய இன்றைய முதலமைச்சர் டாக்டர் ஜெயலலிதா அவர்கள் தானே ஒவ்வொரு காரியத்தையும் முன் நின்று நடத்தி, ஒரு வாரத்திற்கு முன்னாலே கூட இங்கே வந்து பார்த்து, ஏற்பாடுகள் செம்மையாக இருக்கின்றனவா என்று பார்த்து, ஒவ்வொரு துறையிலும் தன்னுடைய கவனத்தைச் செலுத்தி, இது சிறப்பாக நடக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு உலகத் தமிழர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

## தஞ்சைப் பெருமை

தஞ்சை மாவட்டம் கலையழகு மிக்க பொருள்களுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது. அவைகளில் மிகவும் முக்கியமானவை:

- ☆ தஞ்சாவூர் வீணை
- ☆ தஞ்சாவூர்த் தட்டு
- ☆ ஏலக்காய் மாலை
- ☆ கிராம்பு மாலை
- ☆ நெல் மாலை
- ☆ நெட்டி வேலை
- ☆ கண்ணாடிப் பல்லக்கு
- ☆ முத்து விமானம்
- ☆ தலையாட்டிப் பொம்மை
- ☆ அழகுமிகு விக்கிரகங்கள்
- ☆ கண்ணாடியில் சித்திர வேலை
- ☆ தென்னங் கீற்றுப் பந்தல்

# எல்லாம் நீ!



## புலவர் புலமைப்பித்தன்

**வா**வென்று நான் சொல்லும் முன்னமே
ஓடோடி
வருகின்ற தங்க மயிலே!
வற்றாத சொற்சுவையும், எட்டாத கற்பனையும்
வாரிக்கொடுக்கும் மகளே!
நீ வென்ற நெஞ்சங்கள் எல்லாமும்,
நான் என்று நிலை பெற்றிருக்க என்னை
நித்திலக் குவியலாய் நித்தமும் கவிதைகள்
நீ என்னை இயற்ற வைத்தாய்!
சாவென்றும் இல்லாத யுகம் யுகம் வாழும்
சங்கத் தமிழ்க் கொழுந்தே,
சபையேறும் உன்பிள்ளை கவிமன்னன் என்பதை
சற்று நீ காட்ட வா நீ,
பாடென்று சொல்லிடும் முன்னே, ஆயிரம் பாட்டுக்கள்
நான் பாடுவேன், படை கொண்டுவா,
கொற்றக் குடை கொண்டு வா
எனக் கவி பார்த்திபன் வணங்குகிறேன்.
உடையெழும் ஒரு புறம் கொடியெழும் மறவர்கள்
படையெழும் ஒருபுறமே!
படையெழும் எழவரும் பகைவரும் தொடுமென
நடையெழும் ஒருபுறமே
தடையது பொடிபட சிலைபடும் கலையினில்
கழல்எழும் ஒருபுறமே!
படையென-வருவதும் கொடிதர வருவதும்
அழகிய தமிழ் மகளே!
தமிழுக்கும் வணக்கம், எந்தன் தந்தை
ஈரோட்டாருக்கும் அமைவான வணக்கம்,
காஞ்சி அண்ணனுக்கும் அமைவான வணக்கம்.

இமைபோல் என்னக்காத்த தலைவர்க்கும் வணக்கம் சொல்லி,
தமிழுக்கு மகுடம் சூட்டும் தலைவிக்கும் வணக்கம் சொல்வேன்.
அதற்கு முன்னால்,

ராசருக்குஎல்லாம் ராசராய்த் திகழ்ந்த
ராசராச சோழன் கட்டிய பெரிய கோயில் கோபுரத்தின்
நிழல் தரையில் விழாத தன்மை போல் இங்கே இந்த
இரண்டு கோபுரத்தின் நிழல் தரையில் விழுவதில்லை;
ஒன்று புரட்சித் தலைவியின் புகழ் எனும் கோபுரத்தின் நிழல்
இந்தப் பெரிய கோபுரத்தின் நிழல் இன்னொன்று!
தரையில் விழாத தன்மைபோல,
உலகப் புகழ் உச்சியில்
ஓங்கித் திகழும்
எங்கள் தென்னகத்தின் அரசியே,
பொன்னி நதி பாயும்
இப்பூமிக்குவாய்த்த இன்னொரு காவிரி நதியே,
உன்னை எதிர்த்தோர் எல்லாம் முகவரி இழந்தார்,
ஏற்றவர் எல்லாம் புகழால் உயர்ந்தார், உன்னைத்
தாக்க நினைத்தவர் எல்லாம் தகர்ந்து போனார்,
உன்னைத் தூக்க நினைத்தவர் தூர்ந்தே போனார்.
சோதனை ஆயிரம் சூழ்ந்து வந்தாலும்
ஆதிக்கபுரிக்கு அடிபணியாமல்,
சிங்கம் போலப் பிடரி சிலிர்த்து எழும்
எங்கள் புரட்சித் தலைவியே,

## முதல் அட்டை சொல்லும் கவிதை

கையில் கோல் பிடித்திருக்கும் வால் அறுந்த
நரியின்

ஊளைக்கு அஞ்சும் கோழை நான் இல்லை
என்று

நிமிர்ந்து நின்ற மறத்தி நீ!

வென்று திரும்பும் வீறுசால் சிறுத்தை நீ!

ஈரோட்டுப் பாதையில்

சமூக நீதிக்குப் போராட்டம் நடத்திய
வீராங்கனை நீ,

தொட்டில் குழந்தைத் திட்டம் ஒன்று
மட்டுமே உனது

மனிதாபிமானத்தின் எல்லையைக் காட்டும்;

இனிமேல்,

அனாதையாய்ப் பிள்ளைகள் இங்கே
பிறக்கமாட்டா

யாராரோ பெற்றுப் போட்ட பிள்ளைக்கும்

ஆராரோ பாடும் அன்னை நீ அல்லவா!

அதனால் அனாதைப் பிள்ளைகள் இங்கே
பிறக்க மாட்டார்கள்!

வெற்றிச் செல்வி நீ என்பதால் ராமராவ்

வெற்றி விழாவுக்கு அழைத்தார் உன்னை!

நீ தொட்டது துலங்கும், உனது பாதம் பட்டு,

பாலையும் சோலையாய் விளங்கும் நம்

தருமத் தலைவன் கொடுத்த தருமச்சின்னமாம்

இலையின் ஆட்சி இல்லை இனி என்று
நினைத்தவர்

நெஞ்சுக்கு நெருப்பு மூட்டினாய்!

நினைத்ததை முடித்து இருவிரல் காட்டினாய்!

ஏழைகளுக்கு நீ அட்சய பாத்திரம்;

என்றும் எங்களின் முதல்வர், நீ மாத்திரம்!

தேமதுரத் தீந்தமிழுக்கு மாநாடு கண்ட
மாதரசே!

நீ கார்கால மேகம், பூபாள ராகம்!

நின்றால் இமயம், நிமிர்ந்தால் வானம்,

அசைந்தால் தென்றல், அடித்தால் புயல்!

வளர்கின்ற நிலவு, வைகறைப் பொழுது!

வான், வளி, நிலம், நீர், காற்று எனும் இந்த

ஐந்து பூதத்தின் தொகுப்பு!

மானுடமாய் நடந்து வந்த வனப்பு நீ

புரட்சித் தலைவியே, பொதிகை மலை
அருவியே!

எல்லாம், நீ, நீ, உனக்கு என் வணக்கம்.

எனக்குத் தலையிலே வெள்ளையைப் பற்றி

நம்முடைய கு.ப. கிருஷ்ணன் அவர்கள்
சொன்னார்கள்.

அமிழ்தம் ஊறும் அழகிய கவிதைத் தமிழ்த்
தேன் குடத்தைத்

தாங்கிய வண்ணம்-நரைக்குக் காரணம்-
இப்படி அப்படி கை வீசி நடக்கையில்,

எப்படியோ விழுந்து என் தலை நரைத்தது!

கவிதைத் தேன் எப்படியோ விழுந்து என்
தலை நரைத்தது!

அது மட்டுமல்ல, ஆயிரம் நிலவாய் வந்தவர்
இருவர்,

தூய என் தலைமேல் இருப்பதால்,
நிலவு வெள்ளைதானே?

என் தலை வெள்ளியாய்க் காட்சி தருவது
வியப்பில்லை அன்றோ!

தலையும் வெள்ளை, உள்ளமும் வெள்ளையே,

நரை அல்ல தோழனே,

இது நரையல்ல,

தமிழ் நரை, அதை நீ அறிகவே, நரை
என்றால் வெள்ளை, நரை என்றால் தமிழ்.

நாடு வெள்ளையனை விரட்டி விட்டாலும்,

இன்னும் இவர் விரட்டவில்லை என்றார்
கிருஷ்ணன். தங்கமுடி இதுவரைக்கும் என்
தமிழுக்குத் தருவார் இல்லாமையால்

தங்கமடி யாரும் தரவில்லை இன்றைக்கு
வரை


இனிமேல் தங்கமுடி வரலாம்!

பொங்கு தமிழ்ப் புலவன் வெள்ளிமுடி
தரித்தேன்.

கொஞ்சம் மலிவாக இருக்கட்டுமே என்று.

தங்கமனத் தலைவி தமிழுக்கு

நிச்சயமாய்த் தங்க முடி தருவார் பின்
அவற்றைச் சூட்டுவேன்.



தென்னவன், சின்னவன் பார்ப்பதற்கு,

செந்தமிழ்ப் பேச்சில் தேர்ந்த மன்னவன்.

தென்பாண்டி மண்டலம் நமக்களித்த
தென்னவன்!

நமது அண்ணா தி.மு.க.வின் ஆதித்
தொண்டன். என்னவன்.

கவியரங்கில் எனக்கு முன்னிலை வகித்தார்.

பின்னாலே இருந்தவர்க்கெல்லாம் பெருமை
சேர்க்க எண்ணி.

அதனால்தான் முன்னிலையில் நீ
வந்திருக்கிறாய்.

பின்னாலே இருந்தவர்க்கெல்லாம்
பெருமையைச் சேர்க்க எண்ணி.
அன்னையினால் வளர்ச்சி பெற்று,

அமைச்சராய் உயர்ந்து முன்னிலைதனில்
இருக்கும் வாய்ப்பினைப் பெற்ற

நீயே முன்னிலை வகிப்பது என்னும்
மகிழ்ச்சியால் வணங்குகிறேன்!

கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்

தமிழின்மீது மிகப் பற்றாக இருக்கும் கு.ப.
கிருஷ்ணன்,

தாளாண்மை மிக்கவர்,

நம் தலைவிக்கோர் தளபதியாய்
வாய்த்திருக்கும் ஒரு தோழர்.

கவியரங்கத் தலைமையினைநான் ஏற்கும்

நிகழ்சியினைத் தொடங்கி வைத்து

நீள் கவிதையுரை ஆற்ற வந்தவர்க்கு


நெஞ்சார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்
கொள்கின்றேன்.

தம்பி நீ வா, தலைமையேற்க வா என்று

அண்ணாவால் அழைக்கப் பெற்று, நற்றமிழ்
முழங்கும் நாவலர்,

நான் அரசியல் கற்றுக்கொள்ளப்
பெற்றதோர் ஆசான்.

நாவலர் உள்ளிட்ட நல்லமைச்சர்கள்
யாவர்க்கும் எனது வணக்கம் .



மன்றத்தில் கூடியுள்ள மற்றுள்ள யாவர்க்கும்
எந்தன் அன்புசால் இதய வணக்கம்.

வற்றாத காவிரியால் காலமெல்லாம் வளம்
சேர்ந்த பூமி இது!

கழனிதோறும் நெற்பயிர்கள் தென்றலிலே
அசைந்து அசைந்து ஆடிடும் சீமையிது.

கழனிதோறும் நெற்பயிர்கள் தென்றலிலே
அசைந்து அசைந்து விருத்தமிடும் சீமையிது.

கலையும் பாடலும் கற்றவர்கள் இங்கு மிக
அதிகம்.

அந்நாள் கரிகாலன் வடிவிலே ஒளி
புனைந்து கொற்றவர்கள் கடல்கடந்து சென்று

வேங்கைக் கொடி பறக்க விட்டது இந்தச்
சீமையில் தான்!

சேற்றாலே மடை அடைக்கத் தேவையின்றி,

செழுமையினால் வளமையினால் பொங்கி
வைத்த

சோற்றாலே மடையடைத்த பூமி இது!

அந்தத் தூய தமிழ்ச் சிலம்பினொலி

இன்னும் தென்றலோடு
கேட்டுக்கொண்டேயிருக்கும்!

கண்ணகியின் பொற்பாதச் சுவடு

நேற்றோடு மறையாமல்

யுகங்கள் தோறும் நிலைத்து நிற்கும் பூமி
இந்தப் பூமியாகும்.

கவண் அடிக்கக் கல் கிடைக்கா இந்த
மண்ணில்

கலைக் கோயில் கட்டி வைத்தான் ராசராசன்!

அவன் பிடித்த செங்கோலின் கீழ்

இந்த அவனியெல்லாம் ஒரு நாளில்
இருந்ததுண்டு!

அவன் மகனோ கங்கை வரை
படையெடுத்து அழியாத

கங்கை கொண்டான் எனும் பெயர்
பெற்றான்!

புவனமெல்லாம் தமிழுக்குக் கீழே எனும்


பொற்காலம் நமக்கெல்லாம் அக்காலம்தான்!

கரிகாலன் வாழ்ந்திருந்த அக் காலம்

கண்ணெதிரே வந்ததுபோல் நேற்று நான்
பார்த்தேன்!

கரிகாலன் வாழ்ந்திருந்த அந்தக் காலம்
கண்ணெதிரே வந்ததுபோல் புலவர்க்கு
அரியாசனம் கொடுத்த தமிழுக்காக

அணி அணியாய் ஊர்வலங்கள்!



சங்ககாலப் பெருமையினை நமக்கு உணர்த்தும்

காட்சி காட்டும் பெண்ணரசி இவர் நடத்தும் ஆட்சியில்

இன்று தெருவெல்லாம் தமிழ் முழக்கம்!

அதனைக் கேட்டு, தேனாற்றில் மனம் குளிக்கும் இனிக்கும் ஆவி.

தமிழகத்தின் ஊரில் உள்ள பாதையெல்லாம்

தஞ்சை நகர் நோக்கி வந்து சேர்ந்தவண்ணம் அமைந்திருக்கும்

மாநாட்டைக் காண்பதற்கு, அண்ணா நீ இருந்திருக்க வேண்டும்!

தென்றல் கமழ வரும் செந்தமிழில் இதை வருணித்துக்

காவியமே செய்திருப்பாய்! கழகத்திற்கு இமையான நம் புரட்சித் தலைவர் பார்த்தால்

இன்னும் இங்கே நூறாண்டு வாழ்ந்திருப்பார்!

தஞ்சை மாநாடு இங்கே நடக்கிறது.

தஞ்சையில் இருக்கும் ஊர்களில் எந்தன் நெஞ்சைக் கவர்ந்த

நிலைத்த ஊர்கள் எத்தனை எத்தனை?

எண்ணிப் பார்க்கின்றேன்!

அத்தனை ஊர்களில் ஒருசில சொல்கிறேன்.

கொஞ்சு தமிழ்க்காய் வெஞ்சமர்புரிந்த

அஞ்சாநெஞ்சன் அழகிரி பிறந்த பட்டுக்கோட்டை பிடிக்கும்,

கவிஞன் பட்டுக்கோட்டையாரையும் பிடிக்கும்.

தமிழ்த் தென்றலாகத் தமிழ்நாடு முழுவதும்

கமழக் கமழ நடந்த திரு.வி.க. பிறந்ததால்

நிலைத்த பெரும் புகழால் சிறந்ததால் அந்தத் திருவாரூர் பிடிக்கும்.

திருப்பனந்தாளும் திருவையாறும் கரந்தையும்

தமிழுக்குக் கல்லூரி வைத்த பெருமையால் மிகவும் பிடித்த ஊர்கள்!

அண்ணா வழியில் அயராது நாட்டுத் தொண்டு புரியும்

சோமசுந்தரம் அண்ணன் பிறந்த செண்டாங்காட்டு

மண்ணின் வாசம் எனக்குப் பிடிக்கும்!

எஸ்.டி.எஸ். பிறந்த

செண்டாங்காட்டு மண்ணின் வாசம் எனக்குப் பிடிக்கும்!

பொங்குதமிழின் போர் பற்றிக் காட்டும் கங்கைகொண்ட சோழபுரம் பிடிக்கும்!

அயலான் சொல்மாற்றி அருந்தமிழ் பேர்பெற்ற

மயிலாடுதுறையும் மனதுக்குப் பிடிக்கும்!

கார்கால மேகமாய் கானமழை பொழிந்த

சீர்காழி கோவிந்தராஜன் பிறந்ததால் சீர்காழி பிடிக்கும்!

குறுந்தாடி நாவலர் குழந்தையாய்த் தவழ்ந்த

திருக்கண்ணபுரமும் எனக்குப் பிடிக்கும்!

தந்தை பெரியார் தத்துவம் அனைத்தும் காக்கப் பிறந்து

காலமெல்லாம் உழைத்த கே.கே. நீலமேகம் பிறந்ததால்,

செம்பவழம் போல் சிவக்கும் வெற்றிலை வாய் மணக்கும்

கும்பகோணம் அதிகமாய்ப் பிடிக்கும்!

வடமொழி எதிர்ப்பையெல்லாம்

ஒருகை பார்த்து வந்த மொழி இந்த மொழி!

உலகமெல்லாம் அடிமை செய்த ஆங்கிலத்தால் கூட

இன்னும் அழியாமல் நிலைத்த மொழி!

இந்தி எனும் வட மொழியின் ஆதிக்கந்தனை

எதிர்த்து வென்ற மொழி, நின்ற மொழி!

கனைத்துப் பேசும் குடல் மொழியா நமது தமிழ் மொழி?

இல்லையில்லை! கொல்லிமலைத்தேன் நமது தமிழ்த் தேன் ஆகும்!

மூத்தமொழி எங்களது தமிழே!

எங்களது முன்னவர்கள், பின்னவர்கள்

விழியில் வைத்துக்காத்த மொழி எங்கள் தமிழே!

எல்லாம் கடந்த தமிழ்-தமிழே!

முப்பால் வார்த்த எங்கள்

வள்ளுவனைத் தந்த மொழி தமிழே!

வெற்றி சேர்த்த மொழி எங்களது தமிழே!

அர்த்தம் செறிந்த மொழி

செழிந்த மொழி தமிழே அன்றோ.

அந்தத் தமிழுக்கு இன்பத் தமிழுக்கு,

சந்தத் தமிழுக்கு, சங்கத் தமிழுக்கு நடக்கும்

இந்த மாநாட்டின் பெருமையைக் கெடுக்க நினைப்பவன் தமிழனா?

அழகிய தாஜ்மகால் போல, தமிழ்ப் பல்கலைக்கழகம்

என் ராஜா புரட்சித்தலைவர்தானடா அந்த நாளில் கட்டிவைத்து

அருந்தமிழ் வளர்க்க ஆன காரியம் செய்தார்.

மேனா மினுக்கி ஆட்சியில் தமிழுக்குச் செய்த தொண்டு என்ன?

தெரிவிக்கட்டும்!

நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்

என்னும் அறிவுரைதனை

அவர்களுக்கு அறிவிப்பதன்றோ நமது கடமை?

கவிஞர்கள் யார் என்று கேட்டார்.

கதிரவன் ஒளியும் காற்றும் தொடாத

எதையும் எளிதிலே தொடுபவன் கவிஞன்.

வானத்தை அளப்பான்!

வானத்தில் மிதக்கும்

மேகத்தில் நுழைந்து மின்னலைப் பிடிப்பான்!

கண்ணுக்கு எட்டாத தூரத்தை எல்லாம்

சின்ன வார்த்தைச் சிறையில் பிடிப்பான்.

திங்களாய்ச் சிரிப்பான். தென்றலாய் நடப்பான்!

புனலாய் குளிருவான், கனலாய்த் தகிப்பான்!

கொடுமையைக் கண்டால் எரிமலையாவான்!

வறுமையில் கூட செம்மையைக் காண்பான்.

தத்துவ ஞானியாய் ஒரு நேரம் இருப்பான்,

தத்தும் குழந்தையாய் ஒரு நேரம் சிரிப்பான்!

எவனோ ஒருவன்

இப்படிப்பட்ட கவிஞனைப் பற்றி அன்றே சொன்னான்

கவிஞன் யார் என்றால்,

வாழும்போது செத்து, செத்த பின்னால் வாழ்கிறவன் கவிஞன் என்று!

கவிஞனைப் பற்றிப் பொருத்தமாய்



எவனும் இப்படிச் சொன்னதே இல்லை!

எட்டயபுரத்து நூற்றாண்டு விழாவில்

பட்டம் கட்டிய பாரதி பற்றி நான்

முன்பு சொன்ன வரிகளை மீண்டும்

சொல்கிறேன் :

இவன் பசிக்கு ஏதும் இரை கிடைக்காததால்,

இவனே இவன் பசிக்கு இரையாய்ப் போனான்.

என்று பாரதியைப் பற்றிச் சொன்னேன்!

பாரதியைப் பற்றி நான் பாடிய பாடல் ஓரிரண்டு வரிகள்

அவன் இறந்து போய் விழுந்த பாடைக்குப் பின்னே

நடந்தவர் ஓர் பதினாலு பேர்தானாம்!

வறுமையினால் செத்துக்கொண்டிருந்த என்னை

வள்ளல் அவன் ஆதரித்துக் காத்தான் ;

இன்றேல்,

இருந்த இடம் தெரியாமல் போயிருப்பேன்.

இந்நேரம் மண்ணோடு மண்ணாகியிருப்பேன்.

வறுமைக்கும் புலமைக்கும் இருக்கும் சொந்தம்

வரலாற்றில் வேறெங்கும் பார்த்ததில்லை!

அறம் செய்த மன்னரெல்லாம் புலவர்தமை

ஆதரித்துக் காத்ததெல்லாம் அதனால்தானே!

சங்கத்துப் புலவர் முதல் எந்தன்
சமகாலத்துப் புலவர் வரை வாழ்ந்தோர்

நல்ல தங்கத்துப் புதையல் எனக் கவிதை தந்தார்!

சாகாத தமிழைப்போல அவரின் பேரும்

எங்கெங்கும் என்றென்றும் நிலைத்து நிற்க

இறக்காமல் வாழ்பவர்களானார்.

அந்தப் பங்கமிலா கவிஞர்களில்
இந்நூற்றாண்டுப் பாவலர்கள் தமிழ்பாட
நாங்கள் வந்தோம்!

இந்நூற்றாண்டு எழுச்சிக் கவிதைக்கு
நன்னெறி காட்டி

தொடக்கி வைத்தவன் முண்டாசுக் கவிஞன்
வண்டமிழ் பாரதி.

மன்னரை, கடவுளைப் பாடிய கவிதையை

மக்களுக்காக ஆக்கிய மகாகவி.

பாரதி அதனைத் தொடங்கிவைத்தான்.

பாரதிதாசனோ நிறைவு செய்தார்!

பாரதி கவியோ காட்டாற்று வெள்ளம்
பாரதிதாசனோ கங்கையின் பெருக்கம்.

அவன் காணாத தமிழின் எல்லையை
இவன்தான் அளந்து முழுவதும் காட்டினான்.

பாரதியாரோ எட்டடி பாய்ந்தவர்
பாரதிதாசனோ எண்ணூறடி பாய்ந்தவர்!

தேசக விநாயகம் பிள்ளை,

வாசம் கமழும் மல்லிகைப் பூக்களைப்
பாக்களாய்த் தொடுத்தார்.

நானும் அந்தக் கண்ணதாசனும்

அரசவைக் கவிஞர்கள் ஆகுமுன்னரே,

அந்த நாற்காலியில்

அமர்ந்து பார்க்க வந்தவர் நாமக்கல் கவிஞர்.

நாட்டுக்கேற்ற நல்ல கருத்தில்,

பாட்டுக் கோட்டை கட்டிய பாமரன்
பட்டுக்கோட்டை.

கருத்துக்கு இன்றிருக்கும் கட்டுப்பாட்டை
அவன் அறியாதவன்.

அண்ணனின் தாசனாய் சில காலம் இருந்த
கண்ணதாசன்

திரைப்படப் பாடல்களில்

சாதனை புரிந்த சரித்திர நாயகன்;
போதையைப் பாட்டிலே நமக்கவன்
கொடுத்தவன்!

அறுபேர் கவிஞர் அரங்கிலே பாடவந்தார்!

இவர்களே, இன்று பாடும்

வீறுகால் கவிஞர் என்று விளங்குவோர்
ஆனார்.

இந்த அறுபேரோடு

ஏழாய் நானும் தஞ்சை வந்தேன்!

(உலகத் தமிழ் மாநாட்டில் (2.1.95), 'இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள்' என்னும் தலைப்பில் நடந்த கவியரங்கிற்குத் தலைமை வகித்துப் புலவர் புலமைப்பித்தன்அவர்கள் பாடிய கவிதையிலிருந்து.)


தமிழரசு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர்
அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப
வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க

# சான்றோர் கடமை!

### மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
## திரு. டி.எம். செல்வகணபதி அவர்கள்

**த**மிழுக்குத் தொண்டு செய்தோன் சாவதில்லை என்பது புதுவைக்குயில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய கருத்து. தமிழின் வாழ்விற்கும், வளத்திற்கும் தொண்டு செய்தோர் ஏராளம் ஏராளம் என்பதைக் கூடியிருக்கிற நாம் அறிவோம்.

முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர் நம் தமிழ்ச் சான்றோர்கள். தமிழின் வாழ்வும் வளமும் தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வும் வளமும் என்பதையும் நாம் அறிவோம். எனவே, தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வை எண்ணி, இன்றைய எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சீரோடும், சிறப்போடும் நடத்த உதவியாய் நம்மோடு இருந்து, நம்மையெல்லாம் இயக்குகின்ற தமிழகத்தினுடைய ஈடு இணையற்ற முதல்வரும், நம்முடைய இதய தெய்வமுமான தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குத் தமிழ்ச் சமுதாயம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பண்டைத் தமிழ் இலக்கியம் என்று சொல்லும்பொழுது அகநானூறு, புறநானூறு, பத்துப் பாட்டு, எட்டுத்தொகை இவையெல்லாம் பண்டைத் தமிழ் இலக்கியம் என்று கருதப்படக் கூடியவை.

அதிலும், பாமர மக்களுக்கும் புரிகின்ற வகையில் இவை அமைந்துள்ளதோடு, உலகம் முழுவதும் நீதி சொல்கிற அறநூலாக அமைந்துள்ள திருக்குறள் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் மகத்தான இலக்கியம் என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. 133 அதிகாரங்களைப் பெற்றிருக்கிற திருக்குறளில் இறைமாட்சி என்பது ஒரு அதிகாரம். ஒரு அரசன் எத்தகைய பண்புடையவனாக இருக்க வேண்டுமென்பதற்கு, எந்த அளவிற்குச் சில நல்ல பண்புகள் தெளிவாக இருக்க வேண்டுமென்பவை திருக்குறளிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

சான்றாக எடுத்துச்சொல்ல



வேண்டுமென்று சொன்னால் "அஞ்சாமை, ஈகை, அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு" என்று வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார். இந்த 4 பண்புகளும் ஒருங்கே அமையப் பெற்றுள்ள முதலமைச்சராக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குத் தமிழகத்தை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கிற மாட்சியை நாம் கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம்.

இப்படிப்பட்ட பண்புகளைப் பெற்றுள்ள அரசன் இன்றைக்கு மக்களால் எப்படி மதிக்கப்படுவான் என்பதையும் வள்ளுவர் எடுத்தியம்பி இருக்கிறார். முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும் என்று திருவள்ளுவர் அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

குடிமக்களுடைய தேவைகளை, குறைகளை அறிந்து நிவர்த்தி செய்து காப்பாற்றுகின்ற மன்னவன் அம்மக்களால் இறைவனுக்குச் சமமாக மதிக்கப்படுவான் என்கிறார் வள்ளுவர். வள்ளுவர் சுட்டிக்காட்டிய அந்தக் காட்சியை நாம் இன்றைக்குத் தமிழகத்தில் கண்டுகொண்டிருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது.

சிறந்த செய்திகளும் மிக எளிமையாக பண்டைத்தமிழிலக்கியங்களிலே நன்றாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதிலே எந்த அளவிற்கு மிக ஆழமான கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். பல்வேறு உயர்ந்த கருத்துக்களைத் தமிழிலக்கியங்கள் உள்ளடக்கியிருக்கின்றன.


**★ அனுபவம் ஒரு நல்ல பள்ளிக்கூடம்; அதில் முட்டாள்கள் கற்றுக்கொள்ளுவதில்லை!**

**- ஃபிராங்ளின்**

அதேபோல, இலக்கியச் செறிவுமிக்க காட்சிகளையும் நம்மால் பார்க்க முடிகிறது. தமிழ்ப் புலவர்களை அக்கால மன்னவர்கள் எப்படி மதித்துப் போற்றினார்களோ, அதையெல்லாம் இன்றைக்கு நாம் கண்கூடாகத் தமிழகத்திலே பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதே காட்சியை இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலும் கண்டு கொண்டிருக்கிறோம். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த தமிழகத்தில் மீண்டும் மொழி உணர்வுக்கும், வளர்ச்சிக்கும் புத்துயிர் ஊட்டியிருக்கும் புரட்சித் தலைவி அவர்களைக் குறிக்கும் வகையில்தான் அந்த இலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளதோ என்று எண்ணுகிற அளவிற்கு இன்றைக்குப் பண்டைத் தமிழிலக்கியத்தில் உள்ள ஒரு பாடல் என் நினைவிற்கு வருகிறது.

"நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம் அதனால் யான் உயிர் என்பதறிகை, வேல் மிகுதானை வேந்தர்க்குக் கடனே" என்ற பாடல் புலவர் மோசிகீரனார் என்பவரால் எடுத்தியம்பப்பட்டுள்ளது. ஒரு நல்ல அரசன் எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதற்கு அவர் அளித்துள்ள விடை இந்தப் பாடல். இதன் பொருள், ஒரு நாட்டில் நெல் விளைந்தாலும், விளையாவிட்டாலும், நீர் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அந்த நாட்டை ஆள்கிற அரசன் மக்களிடம் நான் இருக்கிறேன், கவலைப்படாதீர்கள், உங்களைக் காப்பாற்றத் தவற மாட்டேன் என்று தைரியம் சொல்கிற அரசனாக இருந்தால், அந்த அரசு நல்ல இயல்புகளைக் கொண்ட அரசு என்பது அதன் பொருள். இதையே தான் திருக்குறளிலும் நான் எடுத்துச் சொன்னேன். முன்பே சுட்டிக்காட்டியிருக்கிறேன். உலகத்தமிழர் அத்துணைப்பேருக்கும்தமிழ்த்தாயாய்த் தலைமகளாக விளங்கிக்கொண்டிருக்கிற எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள். நம்மைக் காப்பாற்ற அவர்கள் இருக்கிறார்கள் என்று நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களின் உயர்வைப் பாமர மக்களும் உணரும் வகையில் வெளிக்கொணர்வது தமிழ்ச் சான்றோர் கடமையாகும். பிற மொழிகளிலும் இவ்விலக்கியங்கள் வெளிவந்தால் தமிழின் பெருமை தரணி எங்கும் ஓங்கும் என்பதில் ஐயம் இல்லை நமக்கு. தமிழன் உணர்வு, தமிழ் உணர்வு பெறுவதற்கும், தன் மொழியின் பால் பற்றோடும், பாசத்தோடும் வாழ்வதற்கும் பண்டை இலக்கியங்களின் சிறப்பை உணர்ந்து கொள்ள வேண்டும். அதனை இந்த மாநாட்டின் மூலமாக, வந்திருக்கின்ற அறிஞர் பெருமக்கள் வெளிக்கொணர நமக்கு உந்து சக்தியாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



# பைந்தமிழின் சில பாதபாடுகள்

### கோவை

கோவை என்று ஒரு நூல் வகை உண்டு. திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை என்பன இன்றும் போற்றிக் கற்கப்படுகின்றன. ஐந்திணைக்கும் உரிய அகப்பொருள் காதல் துறைகள் பற்றி, நானூறு கட்டளைக் கலித் துறையால் பாடுவதாகும் இது. நூலைப் பாட்டுடைத் தலைவன் ஒருவன்மேல் பாடுவர். அதனுள் அமைத்த அகப்பொருள் துறை களுக்கு உரிய தலைவன் கற்பனைத் தலை வன் ஆவான். கோவையில் உள்ள ஒவ்வொரு செய்யுளிலும் இந்த இருவகைத் தலைவரும் பாடப்பெறுவர்.

### உலா

தலைவன் தெருவில் உலா வருதலையும் அவனை ஏழு பருவ மங்கையர் கண்டு காதல் கொள்ளுதலையும் பாடும் நூல் உலா எனப்படும். கலிவெண்பா என்னும் செய்யுள் வகையால் இதனைப் பாடுதல் மரபு. அவ் வாறு பல மங்கையர், காதல் கொள்வதாகப் பாடுதல் அறநெறிக்கு மாறு ஆதலின், அம்மங்கையரைப் பரத்தையர் எனக் கொண் டார் உரையாசிரியர் நச்சினார்க்கினியர்.

"ஊரோடு தோற்றமும் உரித்தென் மொழிப" என்று தொல்காப்பியர் கூறிய தனையே பிற்காலத்தார் ஏழு பருவமாகப் பகுத்து உலாச் செய்யுளாகப் பாடினர் என் பது அவர் கருத்து.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ப வரே அந்த ஏழு பருவத்து மகளிர்.

### மடல்

காதலியைப் பெற முடியாமல் ஏமாற்றம் அடைந்து தன்னைத்தான் ஒறுத்து அழித்துக் கொள்ளும் காதலனுடைய மன நிலையை 'மடல்' என்னும் பெயரால் பாடி வந்தனர். பனைமடல்களால் குதிரை வடிவாகச் செய்து, அதன்மீது இருந்து, தான் விரும்பிய நங்கையின் உருவம் தீட்டிய கிழியை ஏந்தி, ஊரறியத் துன்புறுதலை மடல் ஏறுதல் என்னும் அகப்பொருள் துறையாகக் கூறுவர். மடல் ஏறித் துன்புறுவதைக் கூறுவது அல்லாமல், மடல் ஏற முயல்வதாகக் கூறு வதும் உண்டு. அம்முயற்சி ஆண்களுக்கே உரி யது என்றும், பெண்களுக்கு உரியது அன்று என்றும் மரபு வகுத்தனர்.

### தூது

பிள்ளைத் தமிழ், உலா முதலியவை தமிழிலக்கியத்திற்குச் சிறப்பானவை. தூது என்னும் நூல் வகையோ, வடமொழியிலும் மற்ற இந்திய மொழிகளிலும் உள்ளதே ஆகும். வடமொழியில் காளிதாசர் எழுதிய, மேக சந்தேசம், முகில்விடு தூது ஐரோப்பியப் புலவர்களாலும் பாராட்டப்பட்டுள்ளது.

காதலர் ஒருவர் மற்றொருவரிடம் தம் காதலைத் தெரிவிக்கத் தூது அனுப்புவதாகக் கூறுதலே இந் நூலின் கருத்து. மனிதரைத் தூதாக அனுப்புதலே அல்லாமல் பறவை களையும் விலங்குகளையும் தென்றல் முதலிய உயிரில்லாப் பொருள்களையும் தூது விடுத்தல் மரபு. அன்னம், மயில், கிளி, முகில், பூவை, தோழி, குயில், நெஞ்சம், தென்றல்,

வண்டு என்பன தூதாக அமைத்துப் பாடுவதற்குச் சிறந்தவை. அவையே அல்லாமல், பணம், மான், நெல், புகையிலை, தமிழ் முதலியனவும் தூது செல்ல அமைந்த நூல்கள் தமிழில் உண்டு (பண விடு தூது, மான் விடு தூது, நெல் விடு தூது, புகையிலை விடு தூது, தமிழ் விடு தூது). இவை தூது செல்லும் தகுதி பெற்று விளங்குவதாகவும், ஏனையவற்றிலும் சிறப்புற்றிருப்பதாகவும் புகழ்ந்து கூறப்படும்.

### திருப்பள்ளி யெழுச்சி

தலைவன் உறங்கச் செல்லுதல் பற்றியும் விழித்தெழுதல் பற்றியும் பழங்காலம் முதல் பாட்டுகள் அமைந்து வருகின்றன. அவை கண்படை நிலை எனவும், துயிலெடை நிலை எனவும் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டன. அவற்றுள் பின்னதே இடைக்காலத்தில் திருப்பள்ளி யெழுச்சி என வழங்கப்பட்டது. மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளியெழுச்சியும், தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பள்ளி யெழுச்சியும் இங்குக் குறிக்கத்தக்கன. இந்த நூற்றாண்டின் புலவராகிய பாரதியாரும் பாரதமாதா திருப்பள்ளி யெழுச்சி என்பதைப் பாடியுள்ளார்.

### பிள்ளைத் தமிழ்

பிள்ளைத் தமிழ் என்னும் நூல், தமிழில் மட்டும் காணப்படும் இலக்கிய வகையாக உள்ளது. ஏழாம் நூற்றாண்டில் பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகக் கற்பனை செய்துபாடிய அழகிய பாட்டுக்களே பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கியத்தின் தோற்றம் எனலாம். அவர் பாடிய பாட்டுக்களுக்குப் பிள்ளைத் தமிழ் என்னும் பெயர் இல்லையாயினும், பிற்காலத்தில் அத்தகைய நூறு பாட்டுக்கள் அடங்கிய நூலுக்கு அப்பெயர் அமைந்தது.

சான்றோர்களையும் தேவர்களையும் குழந்தையாகக் கற்பனை செய்து பாடும் இந்நூல் வகை, பொதுவாகப் பத்துப் பருவங்களாகப் பகுக்கப்படும். குழந்தையின் வயதில் மூன்றாம் திங்கள் முதல் மூன்றாம் ஆண்டு வரையில், அல்லது ஐந்தாம் ஆண்டு - ஏழாம் ஆண்டு வரையில் பத்துப் பருவங்களாகப் பகுத்து, ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பாட்டுக்கள் பாடப்படும். மூன்றாம் திங்கள்,



ஐந்தாம் திங்கள் என ஒற்றைத் திங்களையே அப்பருவங்களுக்குக் கொள்வர். ஏழாம் ஆண்டிற்கு மேலும் சில ஆண்டுகளைக் கொள்வது உண்டு! குழந்தை ஆணாயின் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் எனவும், பெண்ணாயின் பெண்பாற் பிள்ளைத் தமிழ் எனவும் குறித்து, அவற்றிடையே வேறுபாடும் கொள்வர்.

### பரணி

போர்க்களத்தில் யானைகளைக் கொன்று குவித்துக் குருதி வெள்ளம் பெருகச் செய்த அரசனது வீரச் செயலைப் புகழ்ந்து பாடுவதற்கென்று ஒரு நூல் அமைந்தது. அது பரணி எனப்படும். அந்த அரசன் எழுநூறு யானைகளையோ ஆயிரம் யானைகளையோ கொன்ற பெருவீரனாக இருத்தல் வேண்டும் என்பர். கடவுள் வாழ்த்து, கடை திறக்குமாறு கூறுதல், பாலை நிலத்தின் கொடிய வெம்மை, காளி கோயிலின் சிறப்பு, காளியைப் பேய்கள் ஏத்துதல், பேய் இந்திரசாலம் காட்டுதல், பேய் கண்ட கனவைக் கூறுதல், பேய்கள் நல்ல நிமித்தங்கள், பேய்கள் தம் பசியைக் கூறுதல், மகிழ்தல், போர்க்களத்தில் பகைவர்க்குத் தீமையான நிமித்தங்கள் கூறுதல், அரசன் வெற்றி மாலை சூடும் செய்தி கூறல், அரசனது மரபு கூறல், காளி போர்க்களத்திற்குச் சென்று காணுதல், போர்க்களத்தில் சமைத்த கூழைப் பேய்களுக்கு வார்த்தல், அரசனை வாழ்த்தல் முதலானவை பரணியில் பாடப்படும் பொருள்கள். இப் பகுதிகளில் உயர்வு நவிற்சியும் பேய்களைப் பற்றிய கற்பனை

களும் மிகுதியாக அமையும்.

**கையறுநிலை**

பிரிவாற்றாத் துயரம் (புரவலன் அல்லது நண்பன் இறந்தபின் செயலற்று வருந்துதல்) பற்றிய பாட்டுக்கள் பல பழங்காலம் முதல் இருந்து வருகின்றன. அவை கையறுநிலைப் பாட்டு - Elegy எனப்படும். புறநானூற்றில் முப்பத்தொரு பாட்டுக்கள் கையறுநிலை யாகப் பாடப்பட்டவை. ஆங்கிலம் முதலான பிறமொழி இலக்கியங்களில் அவை சிறப் பிடம் பெற்று விளங்குகின்றன.

**கலம்பகம்**

பிற்காலத்தில் கலம்பகம் என்னும் நூல் வகை ஒன்று தோன்றிச் செல்வாக்குடன் விளங்கியது. பேராசிரியர் அதை "விருந்து" என்பதற்கு எடுத்துக்காட்டாகக் குறித்தார். அது தன் பெயர்க்கு ஏற்ப, பலவகைச் செய்யுளால் பலவகைப் பொருளும் கலந்து அமைவது. நூறு செய்யுள் உடையது. ஒரு போகு, வெண்பா, கலித்துறை, வெண்டுறை, வஞ்சித்துறை, இன்னிசை வெண்பா, ஆசிரியப்பா, பலவகை விருத்தகம் ஆகிய பாக்கள் கலந்துவரும். புயம், அம்மானை, ஊசல், களி, கள்ளுண்டு மயங்குதல் மறம் (மறக்குடி மக்களின் வீரமொழி), சித்து (இச்சாவாதிகளின் கூற்று), கார் முதலிய காலம், மதங்கியார், வண்டு, மேகம், கைக்கிளை (ஒருதலைக் காமம்), சம்பிரதம் (மாயவித்து) துவம், பாண், தழை, இரங்கல் முதலான பல பொருள்கள் பாடப்படும். நூல் முழுவதும் அந்தாதியாக அமையும்.

**– 'இலக்கிய மரபு' என்னும் நூலில்**
**டாக்டர் மு. வரதராசனார்.**

# எட்டாவது உலகத் தமிழ் மாநாடு: முதலமைச்சருக்கு மொரிசியஸ் அமைச்சர் பாராட்டு

"உலகத் தமிழ் மாநாட்டை, முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மிகச் சிறப்பாக நடத்தினார்" என்று, மொரிசியஸ் நாட்டுக் கல்வி மற்றும் அறிவியல்துறை அமைச்சர் திரு. ஆறுமுகம் பரசுராமன் அவர்கள் புகழாரம் சூட்டினார். அவர் மேலும் கூறியதாவது:

"இது ஒரு பிரமாண்டமான மிகச் சிறப் பான மாநாடு. தமிழர்கள் எல்லோர் மனதிலும் என்றைக்கும் நிற்கக் கூடிய மாநாடு. தமிழ் மொழி, அதன் தொன்மை, பழமை இவற்றையெல்லாம் விளக்கி இயல், இசை, நாடகத்தில் பல்வேறு விதமான சிறப்புக்களை, அம்சங்களை எடுத்துக் காட்டும் விதமாக மாநாடு ஊர்வலம் மனதைப் பூரிப்படையச் செய்தது. அதேபோல இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று தமிழ்களோடு நான்காவதாக அறிவியல் தமிழைச் சேர்க்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பேசிய கருத்து, தற்போதைய கம்ப்யூட்டர் உலகத்தில் வரவேற்கத்தக்கது.

"இந்த மாநாட்டின் சில சிறப்புகளில் முக்கியமாகக் கருதப்படுவது, உலகிலேயே தமிழ் மொழிக்கு என ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நிறுவிய, தமிழ்நாட்டில் அந்தப் பல்கலைச் கழகத்தில் தமிழ் ஆய்வாளர்கள் கூடி, கலந்து நடத்தும் ஆய்வு அரங்கம் நடப்பது மிக்க மகிழ்ச்சி தரக் கூடியதாகும்.

"இந்த நேரத்தில் தமிழக முதல் அமைச்சர் 2 கோடி ரூபாய் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்காகக் கொடுத்தது, அவருக்குத் தமிழ்மொழி வளர்ச்சியில் உள்ள ஈடுபாட் டைக் காட்டுகிறது. இதன் மூலம் பலகோடித் தமிழ் மக்கள் பயன் பெறுவார்கள். அதற்கா கவும் முதல் அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன்.

"இதுபோன்ற தமிழ் மாநாடுகள் மீண்டும் மீண்டும் தமிழ்நாட்டில் நடத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சீரும் சிறப்புமாக நடத்தியதற்காக முதல் அமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித் துப் பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்தேன்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA 7556.95



